நான்காம் தமிழ்ச்சங்கம் - மதுரை

தோற்றம்
14.09.1901

# செந்தமிழ்

பகுதி - 4
தொகுதி - 111
திருவள்ளுவர் ஆண்டு - 2047

திங்கள் இதழ்
விலை ரூ. 20
ஏப்ரல்- 2017




நான்காம் தமிழ்ச்சங்க வெளியீடு

## நான்காம் தமிழ்ச் சங்க ஆட்சிக்குழு

| | |
|---|---|
| முகவை மன்னர் நா.குமரன்சேதுபதி | தலைவர் |
| மருத்துவர் ந.சேதுராமன் | துணைத் தலைவர் |
| வழக்குரைஞர் ச.மாரியப்பமுரளி | செயலாளர் |
| திருமதி. இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி | உறுப்பினர் |
| முதுமுனைவர் இரா.இளங்குமரனார் | உறுப்பினர் |
| பொறிஞர் க.சி.அகமுடைநம்பி | உறுப்பினர் |
| திரு. இரா.சண்முகசுந்தரம் I.R.S (ஓய்வு) | உறுப்பினர் |
| வழக்குரைஞர் கே.ஆர்.என்.கருணாகரன் | உறுப்பினர் |
| திரு. அழ.சித்தையா | உறுப்பினர் |
| வழக்குரைஞர் ச.தசரதராமன் | உறுப்பினர் |
| திரு. துரை கருணாநிதி | உறுப்பினர் |
| திரு. வி.சத்யநாராயணன் | உறுப்பினர் |

## செந்தமிழ் கலை மற்றும் கீழ்திசைக் கல்லூரி

## கல்லூரிக்குழு

| | |
|---|---|
| வழக்குரைஞர் ச.தசரதராமன் | தலைவர் |
| திருமதி. இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி | செயலாளர் |
| வழக்குரைஞர் ச.மாரியப்பமுரளி | உறுப்பினர் |
| பொறிஞர் க.சி.அகமுடைநம்பி | உறுப்பினர் |
| திரு. இரா.சண்முகசுந்தரம் I.R.S (ஓய்வு) | உறுப்பினர் |
| திரு. அழ.சித்தையா | உறுப்பினர் |
| திரு. வி.சத்யநாராயணன் | உறுப்பினர் |
| வழக்குரைஞர் து.மாயராசன் | உறுப்பினர் |
| வழக்குரைஞர் சு.சிவசாமி | உறுப்பினர் |
| பொறிஞர் லெ.சிவக்குமார் | உறுப்பினர் |
| வழக்குரைஞர் ஆர்.பாலாஜி | உறுப்பினர் |
| திரு. ஜெ.பாலதண்டாயுதம் | உறுப்பினர் |
| முனைவர். க.பாலகிருஷ்ணன் பல்கலைக்கழக நியமன | உறுப்பினர் |
| முனைவர். சு.விஜயன் முதல்வர் (பொ) | உறுப்பினர் |
| முனைவர். கி.வேணுகா துணை முதல்வர் | உறுப்பினர் |
| முனைவர். பா.நேருஜி உதவிப்பேராசிரியர் | உறுப்பினர் |

# பொருளடக்கம்

1. இதழ் மணம் 4

2. தனக்குவமை இல்லாத் தனிப்பெரு நூல்-(10) 6
முதுமுனைவர் இரா.இளங்குமரனார்

3. உவமை நிலைக்களம் 11
பேராசிரியர். செ.வை.சண்முகம்

4. உரைமரபும் மொழி மரபும் 23
பேராசிரியர். இரா.கோதண்டராமன்

5. இளையான்குடி மாறநாயனாரின் விருந்தோம்பல் பண்பு
சி.ஞானமணி 30

6. குறவஞ்சியின் இலக்கியக் கட்டமைப்பு 34
டாக்டர். மா.இராமலிங்கம்

7. சங்கச் செய்திகள் 40

வலைதளம்: www.maduraitamilsangam.com
: www.senthamilcollege.com
மின்னஞ்சல்: maduraitamilsangam@yahoo.co.in
: principalsenthamilcollege@yahoo.co.in

| இதழ்க் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக்கட்டணம் | ரூ. 200 | ரூ. 1,000 |
| ஆயுள் கட்டணம் | ரூ. 3,000 | ரூ. 10,000 |
| புரவலர் கட்டணம் | ரூ. 10,000 | ரூ. 20,000 |
| தனி இதழ்க்கட்டணம் | ரூ. 20 | |

# இதழ் மணம்

தமிழறிஞர் இளங்குமரனார் தொல்காப்பியப் பதிப்பு வரலாற்றை இவ்விதழில் எழுதியுள்ளார். மதுரை இராமநாதபுரம் சாலையில் மழவராயனேந்தல் என்னும் சிற்றூரில் தோன்றிய மழவை மகாலிங்கையர் எனப் புகழ்பெற்ற தமிழறிஞர் முதன்முதலில் தொல்காப்பியத்தைப் பிழையின்றித் திருத்தமுறப் பதிப்பித்த பெருமைக்குரியவர். அவர் சென்னையில் கல்வி கேள்வி மிக்கவராக விளங்கித் தமிழாசிரியராகப் பணிபுரிந்தவர். மகாவித்வான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை சென்னையில் இருந்த காலத்தில் அப்பெருமகனாரின் நன்மதிப்பைப் பெற்றதோடு மகாவித்துவான் நூலையும் பதிப்பித்து உதவினார். மழவை மகாலிங்கையரைப் பற்றிய செய்திகளை உ.வே.சா எழுதிய *"மகாவித்வான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை சரித்திரம்"* என்னும் நூலில் காண்க.

பேராசிரியர் செ.வை.சண்முகம் அவர்கள் *"உவமைநிலைக்களன்"* என்ற தலைப்பில் கட்டுரை வரைந்துள்ளார். உரை ஆசிரியர்கள் நிலைக்களம் குறித்துக் கொண்டுள்ள வேறுபாடுகளைச் சுட்டி எடுத்துக் காட்டுக்களில் உள்ள குறைநிறைகளையும் காட்டுகின்றார். உவமை கருத்தாடல் உத்தியாகவும் புதை நிலை மொழி அமைப்பாகவும் பயன் படுவதையும் எடுத்துரைத்துக்கிறார். பேசுபவரும் கேட்பவரும் ஒத்த புரிதல் உடையவராக இருக்கும்போது உவமையின் பயன்பாடு சிறக்கிறது. ஆசிரியர் தோற்றம் நிலைக்களம் குறித்து அரிதின் முயன்று மொழி நூல் சிந்தனையோடு விளக்கியுள்ளது கற்பவர்களுக்குத் தொல்காப்பியம் குறித்த புதிய தகவலாகும். கட்டுரை ஆசிரியர் இளம்பூரண அடிகள் பேராசிரியர் இருவருடைய எடுத்துக்காட்டுக்களின் வன்மை மென்மைகளை வாசகருடன் பகிர்ந்து கொள்வது கவனத்தில் கொள்ளத்தக்கது. இந்திரா மனுவேல், உள்மேன் ஆகியோர் உவமை இசையையும் வசையையும் சுமந்து வரும் குரல் எனச் சுட்டியிருப்பதையும் காட்டி நம்மைச் சிந்திக்க வைக்கிறார்.

***"உரை மரபும் மொழி மரபும்"*** என்னும் பேராசிரியர் இரா.கோதண்டராமன் கட்டுரை முரண்பாடுகளைச் சுட்டுகிறது. தொல்காப்பியர் நூற்பாக்களில் உள்ள முரண்பாட்டை ஆசிரியர் எடுத்துரைப்பது குறிப்பிடத்தக்கது.

"தொல்காப்பிய மொழி இலக்கணத்தைப் பொறுத்தவரை சில இடங்களில் மாறுபடுவதற்கு வாய்ப்பு இருந்தும் உரையாசிரியர்கள் தொல்காப்பியரையே வழிமொழியும் போக்குக் காணப்படுகிறது" என்பது கட்டுரையின் மதிப்புரை. உரை ஆசிரியர்களைப் பற்றிக் குறிப்பிடும் போது, "ஒரு தொன்மையான இலக்கியத்திற்கு உரை வகுக்கையில் குறிப்பிட்ட வாய்பாட்டுச் சொற்களுக்கான பொருண்மை விளக்கம் நேரிதாக அமைய

வேண்டும். இந்த வகையில் பரிமேலழகரின் உரை மரபு எங்ஙனம் மொழி மரபிற்கு ஏற்புடையதாக அமையவில்லை என்பதைச் சில எடுத்துக் காட்டுக்களுடன் இங்கே புலப்படுத்தலாம் என்பது பேராசிரியர் இரா. கோதண்டராமன் கட்டுரையில் தெளிவாகிறது.

வழிமொழிகின்ற பழக்கத்தைப் பேராசிரியர் நயம்பட மறுத்துரைத்து, எப்பொருள் எத்தன்மைத்தாயினும் யார் யார் வாய்க்கேட்பினும் பொருண்மை விளக்கம் நேரிதாக அமையவில்லை என்பதை உறுதிபட விளக்குகின்றார். கோட்பாட்டில் உறுதியாக இருப்பதை மாற்றி எதனையும் மறுசிந்தனைக் குரியதாகவும் சார்ந்து நின்று ஒன்றைச் சிந்திக்காமல் உண்மை காணும் நோக்கம் சிறந்தது என்னும் மனப்பயிற்சியும் கல்விக்கோட்பாடும் கல்வியாளர்க்கு இன்றியமையாத பண்பாகும். பேராசிரியர் மொழிநூல் அறிஞர்; அவர் திராவிடமொழி இலக்கணத்தில் ஆழங்காற்பட்டவர். இக்கட்டுரை அவருடைய புலமை விளக்கத்திற்கு மற்றும் ஒரு மைக்கல் எனலாம்.

*"இருந்தோம்பி இல்வாழ்வது எல்லாம் விருந்தோம்பி*
*வேளாண்மை செய்தற் பொருட்டு"* —என்னும்

குறட்பாவின் விளக்கமாக சேக்கிழாரின் இளையான்குடி மாறநாயனார் வரலாறு இலக்கிய வடிவம் பெறுகிறது. அப்பெரியாரின் வரலாற்றையும் விருந்தோம்பல் பண்பாட்டையும் தமிழாசிரியர் சி.ஞானமணி மிகச் சிறந்தமுறையில் எடுத்துக் காட்டியுள்ளார்.

பேராசிரியர் மா.இராமலிங்கம் 1987ஆம் ஆண்டில் செந்தமிழ் இதழில் எழுதிய "குறவஞ்சியின் இலக்கியக் கட்டமைப்பு" என்னும் கட்டுரை இடம் பெறுகிறது. குறவஞ்சி நாடகம் என்னும் தலைப்பில் பேராசிரியர் தமிழ் நாடக வரலாற்றையும் நாடகக் கலையின் கட்டமைப்பையும் எடுத்துரைப்பது அவருடைய முத்தமிழ் கல்வியின் மாண்பை வாசகர்களுக்கு எடுத்துரைக்கிறது. மேலும் குறவஞ்சி ஆசிரியர் திரிகூட ராசப்பக் கவிராயர் குறவஞ்சி நாடகத்தைப் படைத்து அந்த நாடக வடிவத்திற்குப் பெருமை சேர்த்தார். குற்றாலக் குறவஞ்சி நாடகம் போல படிப்பார்க்கு இன்பம் தரும் இலக்கியம் எதுவும் இல்லை எனலாம். அதற்குக் காரணம் கவிராயரின் கவிதையும் கற்பனையும் ஆகும். அதன் கட்டமைப்பைப் பேராசிரியர் மா.இராமலிங்கம் தமக்குள்ள உலக இலக்கியப் புலமை நலத்தால் கட்டுரையை வடிவமைத்து அந்நாடகத்தைத் திறனாய்வு செய்திருப்பது திரிகூட ராசப்ப கவிராயர்க்கு மொழியும் மக்களும் வழிபாடு செய்வதற்குரிய அருமை உடையதை ஆசிரியர் கட்டுரையில் வெளிப்படுத்தி யுள்ளார். அப்பேராசிரியர் பெருமகனார்க்கு தமிழுலகம் என்றும் கடப்பாடுடையதாகும்.

++++++

# தனக்குவமை இல்லாத் தனிப் பெருநூல்

**10**

## பதிப்பியல் நோக்கு—

தொடர்ச்சி

முனைவர். **இரா.இளங்குமரனார்**

**உரைப்பதிப்பு :**

1847இல் மழவை மகாலிங்க ஐயர், தொல் எழுத்து நச்சினார்க்கினியம் வெளியிட்டது முதல் உரைப்பதிப்பு தொடக்கமாயிற்று.

*"கர லிகிதங்களால் ஆய வழுக்களை நீக்கி அச்சிட்டுத் தருக எனச் சில வித்துவான்கள் கேட்டுக் கொண்டபடி செய்யப் பெற்றதாக"* இந்நூல் முகப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

*"பல ஏடுகளைக் கொண்டு வழுவறப் பரிசோதித்து வெளியிட்டது"* என்று சில பதிப்புகள் (1868 தொல்.எழுத்து. இளம்: 1868 தொல். சொல்.சேனா) வெளிவந்த பின்னர், தொல். பொருள். நச்சினார்க்கினியம் 1885இல் வெளிவந்தது. பதிப்பித்தவர் *சி.வை.தாமோதரம்பிள்ளை.*

இப்பதிப்பிலேயே *"திருத்தணிகை சரவணப் பெருமாளையர் பேரர் துரைசாமி ஐயர் பிரதி; புரசவாக்கம் சாமுவேல் பண்டிதர் பிரதி; தொல்காப்பியம் வரதராச முதலியார் பிரதி; இவை முதலாகப் பன்னிரண்டு பிரதிகள் கொண்டு ஆராயப் பெற்றது"* என்னும் குறிப்பு காணப்படுகின்றது.

ஒரு வினாவைத் தாமோதரனார் எழுப்பி அதற்கு விடையும், ஒரு தீர்வும் கூறுதல் பதிப்புத் தூய்மையில் அவருக்கு இருந்த அக்கறையைப் புலப்படுத்துகின்றது.

"வழுவுற அச்சிட வேண்டியதென்னை? என்று யாரும் வினவுவராயின், வழுச் செறிந்ததாயினும் அடியோடழிந்து போகிற நூலை அடியேன் பாதுகாத்தது பேருபகாரம் அன்றோ என்க... பிரதி கிடைப்பதே மிக அருமையாயும் கிடைப்பினும் குறைப் பிரதிகளாகவும், அவை தாமும் ஒரோ ஒரு வரிக்குப் பல வழுவாக ஆயிரக்கணக்கான வழு உடையனவாகவும் இருக்க அடியேன் அவ்வழுத் தொகையைக் குறைத்து நூற்றுக்கணக்காக்கி விட்டதா என் மேல் குறையாயிற்று."

*"ஐம்பது புதுத் திருத்தங்களுக்கு ஒரு பிரதி* என் நன்றி அறிவிற்கோர் அடையாளமாக அனுப்புவேன். *இந்நூல் பிழையற வழங்கச் செய்தல் ஓர் பெரும் லோகோபாகாரமென்று உணர்வாராக"* என்பவை அவை.

அச்சிட்ட நூல்களை, ஏட்டுப்படியுடன் ஒப்பிட்டுத் திருத்தம் காட்டிப் பதிப்புப் பணிக்கு ஆக்கம் செய்த சான்றோர்களும் அந்நாள் இருந்தனர். "மழவை மகாலிங்கையர் அவர்களும் யாழ்ப்பாணம் *சி.வை.தாமோதரம்பிள்ளை* அவர்களும் வெளியிட்ட தொல்காப்பிய எழுத்ததிகார நச்சினார்க்கினியர் உரை அச்சுப் பிரதிகளில் சிறப்புப்பாயிர உரைக்கண், இக்கருத்தானே வள்ளுவ நாயனாரும் முப்பாலாகக் கூறி' என்றவிடத்து, எமக்குக் கிடைத்த அந்நூற் பழைய ஏடுகள் பலவற்றினும், *'இக்கருத்தானே வள்ளுவனாரும் முப்பாலாகக்*

*கூறி'* என்பதே உள்ளது என்று செந்தமிழ் இதழாசிரியர் இரா.இராகவ ஐயங்கார் திருத்தம் காட்டியமை ஒரு சான்றாம் (செந்தமிழ், தொகுதி 1, பகுதி 1, பக்கம் 56).

1916, 1917 ஆகிய ஆண்டுகளில் வெளிவந்த *ச.பவானந்தம் பிள்ளையின்* தொல்காப்பியப் பதிப்புகள் (தொல்.பொருள். நச்: தொல்.பொருள்.பேரா.) *அச்சு, தாள், அட்டைக்கட்டு* என்பவற்றின் வனப்பைக் கருதுதற்கு முன்னோடியாக அமைந்தன.

1920இல் தொல்.பொருள் இளம்பூரணருரை *கா.நமச்சிவாயரால்* வெளியிடப்பட்டது. அது, பதிப்பு வனப்புடன் *மேற்கோள் செய்யுள் முதற் குறிப்பு, மேற்கோள் நூல் முதற்குறிப்பு, சூத்திரமுதற்குறிப்பு, பாடவேறுபாடு* என்பனவற்றையெல்லாம் கொண்டு சிறந்தது.

1923இல் தொல்.சொல்.சேனாவரையம் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினரால் வெளியிடப்பட்டது. அச்சு, தாள், அட்டைக்கட்டு வனப்பொடு மேலுமொரு வனப்புக் கொண்டது.

அது, தொல்காப்பிய ஏட்டுப்படியொடு பயின்று, அப்படியொரு அச்சிட்ட படிகளை ஆய்ந்தும் திருத்தம் செய்தும் வேண்டும் *விளக்கக்குறிப்பு* எழுதியும் வைத்திருந்த பேராசிரியர் இரா.கந்தசாமியாரைக் கொண்டு பதிப்பித்ததாகும். பின்னர், மொழி ஞாயிறு பாவாணரும் அடிக்குறிப்பும் ஆய்வும் எழுதினார். *மேற்கோள் பாடல்களின் இடவிளக்கம் இப்பதிப்பில் மேற்கொள்ளப்பட்டது.*

இவற்றால், உரையொடு கூடிய தொல்காப்பியப் பதிப்புகளின் வளர்நிலை அறியலாம். இவற்றின் மேல்வரம்பாகச் சுட்டத்தக்கவை, யாழ்ப்பாணம் *சி.கணேசையரின் தொல்காப்பியப் பதிப்புகளாம்.*

தொல். எழுத்து. நச்சினார்க்கினியம் (1937) தொல். சொல். சேனாவரையம் (1938) தொல். பொருள் (1943) ஆகியவை அவரால் பதிப்பிக்கப்பட்டவை.

சுன்னாகம் திருமகள் அழுத்தக உரிமையாளர் *நா.பொன்னையா* அவர்கள் தாம் தொல்காப்பியத்தை உரையொடு பதிப்பிக்க விரும்புதலைத் தெரிவிக்க, கணேசையர், *"யாம் படித்த காலத்தும் படிப்பித்த காலத்தும் குறித்து வைத்த குறிப்புக்களைத் தருகின்றோம்; அவற்றைக் கொண்டு சென்று, அவ்வுரையோடு சேர்த்துப் பதித்துத் தமிழ் உலகிற்குப் பயன்படுத்துக"* என்று சொல்லி உரைக் குறிப்புக்களை உதவினார்.

அவ்வுரைக் குறிப்புகளின் அருமையும் பெருமையும், அவற்றைத் தக்காங்கு பதிப்பில் விளக்கமுறப் பயன்படுத்திய பாங்கும், அச்சு அமைப்பும், தாள்வனப்பும், அட்டைக்கட்டும் முன்பின் இணைப்புகளும் ஒன்றில் ஒன்று சிறக்க அமைந்து தனக்குத் தானே ஒப்பு எனத் திகழ்கின்றன. எம்மிடமுள்ள 1943, 1952, 1955 பதிப்புகள் அச்சுக்கலை வளர்ந்த இந்நாளினும் வென்றே நிற்றல் கண்கூடு.

சூத்திர அகராதி, உதாரண அகராதி, அரும்பதவிளக்க முதலியன விடய அகராதி, அநுபந்தம் என்பவை பதிப்புப் பெருமையைப் பறை அறைவன.

பொருளதிகாரப் பேராசிரியப் பதிப்பு மேலும் ஒரு சிறப்புக் கொண்டுள்ளது மெய்ப்பாட்டியல் உவமஇயல் ஆகிய இரண்டன் முன்னரும் *இயற்சுருக்கம்* திரட்டுப் பாகாக வழங்கப் பெற்றுள. இயலின் நிறைவில் *உதாரணச் செய்யுள்களுக்கு உரை வரையப்பட்டுள.*

இம்முறையையே செம்முறையாக எல்லா இயல்களுக்கும் கொண்டிருப்பின் தொல்காப்பியம் பயில்வார்க்கு மேலும் பெருங் கொடையாகத் திகழ்ந்திருக்கும்

**ஓர் ஆய்வுத் தெளிவு :**

"இவை யெல்லாம் இக்காலத்தில் வழக்கினுள் அரிய"

"இவை இக்காலத்து வீழ்ந்தன"

"வந்துழிக் கண்டு கொள்க"

"இவற்றுக்கு உதாரணம் காணாமையின் காட்டாமாயினாம்"

என மரபியல் உரையில் காண்கிறோம்.

***"அவற்றுள், பார்ப்பும் பிள்ளையும் பறப்பவற் றிளமை"*** (மரபு 4)

***"தவழ்பவை தாமும் அவற்றோ ரன்ன"*** (5)

என்பவற்றை அடுத்து,

***"பறழெனப் படினும் உறழாண் டில்லை"***

என்னும் நூற்பா இடம் பெற்றிருந்தால் அக்காலத்தும் இக்காலத்தும் எடுத்துக்காட்டு உள்ளனவாய்த் திகழ்ந்திருக்கும். ஒரு நூற்பாவைத் தள்ளி இந்நூற்பா இடம்பெற்றுவிட்டமையால் இலக்கணம் கண்டதற்கு எடுத்துக் காட்டு இல்லாமையும், எடுத்துக்காட்டு உள்ளவைக்கு இலக்கணம் இல்லாமையும் ஆகிவிட்டன இடம் மாற்றி அமைத்தால் இடர் நீங்குகின்றது. உண்மை இதுவாயினும் மூலத்தை இடமாற்றி அமைக்க நமக்கு உரிமை இல்லை. ஆய்வு நெறிகாட்டலே ஆய்வார் நெறியாம். எம்நூல், *'தொல்காப்பிய மரபியல் ஆராய்ச்சி'* என்பது காண்க.

"கிடக்கை முறையில் எந்த மாற்றமும் செய்யாமல், கிடந்தாங்கு போற்றிக் கொண்டு, ஆனால் இப்படி இப்படி இருக்கலாம், இருந்தால் பொருளிதுவாகும் என்று பொருள் விளக்கம் செய்யும் அளவில் நிறுத்திக் கொள்ள வேண்டும்" என்பார் அறிஞர் *வ.சுப.மாணிக்கனார்* (தொல்காப்பியத்திறன், பக்கம் 7)

**உரைக்களஞ்சியப் பதிப்பு :**

உரைக்கோவை, உரைவளம் என்னும் பெயர்களால் வெளிவந்த தொகுதிகள் இவையாம்.

முனைவர் வ.அய்.சுப்பிரமணியம் முனைவர் ஆபிரகாம் அருளப்பன் ஆகியோரால் சொல் 1–4 உரைக்கோவை 1963 இல் வெளியிடப்பட்டது. தொல்காப்பியக் களஞ்சியப் பதிப்பில் தலைப்பட்டது இது.

முன்னைப் பதிப்புகளில் அடிக்குறிப்பாகப் பிற உரையாசிரியர் உரை வேறுபாடு காட்டப்பட்டது. முழுதுரை இணைப்பாகத் தோன்றிய வகை இது.

உரைவளம் என்னும் பெயரால் *மு.அருணாசலம்பிள்ளை, ஆ.சிவலிங்கனார், க.வெள்ளைவாரணர்* என்பார் இப்பதிப்பில் ஈடுபட்டனர். இவருள் பின்னவர் இருவரும் பெருங்கடனாற்றியுள்ளனர்.

சொல்லதிகாரமே *இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், தெய்வச்சிலையார், கல்லாடனார்* எனப் பலர் உரையைக் கொண்டிருப்பதால் உரைக்கோவை வெளியீட்டைத் தூண்டியதாம்.

உரைகளைத் தொகுத்து நண்பர்களுடன் சில இயல்களைப் படித்த போது அவற்றுள் இளம்பூரணம் சேனாவரையம் கல்லாடம் பழையவுரை ஆகியவை ஏறத்தாழ ஒரே நிலையில் உரையோடு உதாரணம் கூறுவதும் தெய்வச்சிலையார் மட்டும் தனித்து நின்று உரை கூறுவதும் புலனாயின.

எனவே, இவ்வுரைகளை *வரிசைப்படுத்தி ஒருகோவையாக வெளியிட்டால் மாணவர்களும் ஆசிரியர்களும் பயனடைவார்கள்* என்று உணர்ந்தோம் என்னும் தொகுப்பாசிரியர்கள் முன்னுரை, உரைக்கோவை உருவாகிய வகையை உரைக்கும்.

கிளவியாக்கம், வேற்றுமையியல், வேற்றுமைமயங்கியல், விளிமரபு என்னும் நான்கு இயல்களுக்கு மட்டுமே உரைக்கோவை முதல்பாகம், என வெளிவந்தது (1963).

*இளம்பூரணர், தெய்வச்சிலையார், சேனாவரையர், நச்சினார்க்கினியர், கல்லாடனார்,* அரசு (கையெழுத்துப் பழையவுரை) என உரைகள் வரிசைப் படுத்தப்பட்டன. பாடவேறுபாடும், தெளிவுக் குறிப்புகளும் அடிக்குறிப்பாக இடம் பெற்றன.

தொல்.பொருள். அகத்திணை இயலுக்கு வாய்த்த இளம்பூரணர் நச்சினார்க்கினியர் உரைகளுடன் புத்துரையாம் நாவலர் பாரதியார் உரையும் முறையே அமைய நூற்பாத்தோறும் உரைவிளக்கம், உரைக்கு வேண்டும் அடிக்குறிப்பு, ஆய்வுக்குறிப்பு என்பவை எழுதி மு.அருணாசலம் பிள்ளை வழங்கிய உரைவளம் மதுரைப்பல்கலைக்கழகத் தமிழ்த்துறை வழியே வெளிவந்தது (1972). அப்பணியை வெள்ளைவாரணனார் தொடர்ந்தார். உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் வழியே *ஆ.சிவலிங்கனார்* உரைவளம் நூன்மரபு முதலாகத் தொடர்ந்தது.

உரைவளச் சிறப்பு, ஆய்வார்க்கு அருந்துணையாக அமைந்திருத்தலாம். உரைகளை மட்டும் வைப்பாக்கியவை அல்ல அவை. ஆய்வுக் கட்டுரைகள், ஆய்வுப்பொழிவுகள் என்பவற்றின் வழியாகக் கிடைப்பனவற்றையும் உரிய

பொருள் வைப்பில் இடம்பெறச் செய்த பெருமை அதற்கு உண்டு. மேலும் இலக்கண ஆய்வில் ஆழங்கால் பட்டவர்களே அப்பணியால் ஊன்றியமையால் அவர்கள் ஆய்வுச் சிறப்புகளும் இடம் பெற்றன.

முடிவுரை :

உரைக்கோவை, உரைவளம் ஆகிய களஞ்சியப்பணி முடிந்த பணியாக என்றும் இருக்கப் போவது இல்லை. ஆய்வு தொடரும் தொடர்பணிக்கு முடிவேது? புதுவளம் பெறப்பெறத் தொகைப் பணியும் தொடருமாகலின் நிலைபேறாம் பணியெனல் சாலும்.

கணினி வரவால், பதிப்பு வளம் நாள்தோறும் மெருகேறி வருதல் கண்கூடு. ஆதலால் புத்தக அமைப்பு அச்சு வனப்பு என்பவற்றைக் கற்பார் எண்ணம் நாடுகின்றது.

பழநாளைப் போல் நூற்பா, உரை என்பவற்றை வரப்படுத்திக் கொள்ளும் அமைதியும் ஆர்வமும் இல்லை. அகராதியைப் புரட்டிப் பொருள் காண்பது போன்ற சொல்லடைவு, பொருளடைவு ஆகியவை வேண்டப்படுகின்றன.

மாறிவரும் பழக்கவழக்க கால இடச் சூழல்களால் எளிய ஓட்டத்தில் அறிந்து கொள்ளக் கூடிய இயல் நடையைக் கொண்டே பழமையைப் பாதுகாக்கும் நிலைமை உள்ளது.

ஒப்பிட்டுக் காணல், ஒப்புக் கொள்ளும் அறிவுமுறையொடு பொருந்தியிருத்தல், சொல்மயக்கத்தில் அழுந்தாமை, காரணம் காணாமல் நம்பமாட்டாமை என்பவை உள்ளமையை நோக்கிய பதிப்பியல் பார்வை வேண்டும்.

பிறமொழியாளர் அவர் மொழி இலக்கணத்தொடு ஒப்பிட்டுக் காணும் வகையில் மொழி பெயர்ப்பும் செய்திச் சுருக்க முகப்பும் இருத்தல் அவரை வயப்படுத்தும்.

பாலும் தூயதாய், பால் வைத்த கலமும் தூயதாய் இருக்க வேண்டுவது போல நூலின் வளமையும் நூலின் பதிப்பு வளமையும் ஒருங்கு கைகோத்து நடையிட வேண்டும் என்க.

தொல்காப்பியக்காலம், அவற்றில் அமைந்துள்ள மொழியியல் நெறி, துறையறிவு, கலைச்சொல், வாழ்வியல் வளம், அறிவியல் கூறு, போரறம், மெய்யியல் மேம்பாடு, சொல்வளம் என்பவையெல்லாம் வெளிப்படக் காட்டும் ஆவணம் என்பவற்றை ஆய்ந்து காட்டுதலும், *சங்கநூல் கொடையின் மூலவைப்பகம்* தொல்காப்பியமே என்பதுவும், தமிழர் நெறியாம் *திருக்குறள் சட்டகம் தொல்காப்பியமே* என்பதும் காட்டும் ஆய்வுச் செம்பதிப்புகள் உருவாக்கப்படுதலும் இக்காலக் கட்டாயக் கடமைகளாம்.

**வாழிய நலனே! வாழிய நிலனே!**

❖ ❖ ❖

# உவமை நிலைக்களம்

பேராசிரியர் **செ.வை.சண்முகம்,**
பேராசிரியர் பணி நிறைவு,
மொழியியல் புலம்,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம்
கைபேசி : 98651 96476

## 1. முன்னுரை :

தொல்காப்பிய உவமவியலின் முதல் இரண்டு சூத்திரங்கள் தோற்றம் பற்றியும்; 4வது, 5வது சூத்திரங்கள் நிலைக்களம் பற்றியும் நேரடியாகப் பேசுகின்றன. 10வது சூத்திரத்தில் *'சிறப்பில் தீரா'* என்ற தொடர் இருப்பதால், சிறப்பு என்னும் நிலைக்களத்தைச் சார்ந்ததாக இளம்பூரணர் குறிப்பிட்டுள்ளார். தோற்றம், நிலைக்களம் ஆகியவை கோட்பாட்டு அளவில் முக்கியமானவை. இங்கு நிலைக்களம் மட்டும் ஆராயப்படுகிறது.

## 2. நிலைக்களம் :

நிலைக்களம் பற்றிய நேரடி விளக்கம் 4 ஆம் சூத்திரத்தில் உள்ளது 10ஆம் சூத்திரத்தில் *'சிறப்பில் (தீரா)'* என்ற தொடர் அமைந்துள்ளதாலும், *'மேற் கூறப்பட்ட சிறப்பு என்னும் நிலைக்களத்து'* என்று இளம்பூரணர் பதவுரையில் குறிப்பிடுவதாலும் அந்தச் சூத்திரமும் நிலைக்களம் பற்றிப் பேசுவதாகக் கொள்ள வைக்கிறது அதன் நிறை குறை பின் பகுதியில் விளக்கப்படும்

***"சிறப்பே நலனே காதல் வலியோடு***
***அந்நாற் பண்பும் நிலைக்களம் என்ப'*** (உவமை. 4)

என்பது சூத்திரம். இங்கு அடிப்படையான கேள்வி நிலைக்களம் எதைக் குறிக்கிறது அதாவது வகைகளின் பொருளும் அவைகளின் அடிப்படையும் என்பதுதான்.

### 2.1 நிலைக்களம் : பொருள்

நிலைக்களன் என்பது *'இவையிற்றைப் பற்றித் தோன்றும் என்பது கருத்து'* என்பது இளம்பூரணர் பதவுரை. தோற்றத்துக்கு அடிப்படை / மூலம் என்று பொருள் கொள்ளலாம். அப்படியானால் அதன் உள்கிடை என்ற கேள்வி எழுகிறது.

*'நான்கும் இடனாகப் பிறக்கும் உவமை'* என்று பதவுரையிலும் *'நிலைக்களம்'* என்பது, 'அவை அவ்வாறு செய்வதற்கு முதலாகிய நிலைக்களம் என்றவாறு' என்பது பேராசிரியர் விளக்கம்.

*'முதல்'* என்பது காரணம் என்று பொருள் கொள்ளலாம். அதற்கு ஏற்ப உதாரணங்களை விளக்கும் போது *'காதல் காரணமாக... வலி காரணமாக உவமை பிறந்தது'* என்று பேராசிரியரே பயன்படுத்தியுள்ளதால் நிலைக்களம் என்பது தோற்றத்துக்கு உரிய மூல காரணம் என்று கொள்ளலாம்.

1) 'சிறப்பு என்பது உலகத்துள் இயல் வகையான் அன்றி விகார வகையான் வரும் சிறப்பு, நலன் என்பது அழகு; காதல் என்பது அந்நலனும் வலியும் இல்வழியும் உண்டாக்கி உரைப்பது; வலி என்பது தன் தன்மையானே உள்ளதொரு வலி எனக் கொள்க. 2) இவற்றை நிலைக்களன் எனவே 'அவை பற்றாது உவமை பிறவாது என்பதாம்' என்ற பேராசிரியர் கூடுதல் விளக்கத்தில், நாலு வகைகளின் விளக்கமும் (1) அதற்கான மூல காரணமும் (2) காணப்படுகின்றன.

சிறப்பு=செயற்கைச் சிறப்பு (விகாரம்), நலன்=இயற்கைச் சிறப்பு, காதல்=காரணம் இல்லாத உளவியல் உணர்வு, வலி=இயல்பான வலிமைப் பண்பு. *'அவை பற்றாது உவமை பிறவாது'* என்பதால் உவமையைப் பயன்படுத்துவதற்குக் காரணம் உண்டு என்று ஆகிறது.

சிறப்பு விகார வகை என்று கொள்வதற்குப் பேராசிரியர் கொண்ட உதாரணம் காரணமாக இருக்கலாம் என்று தோன்றுகிறது.

உவமைத் தோற்றம் உலகியல் அறிவுசார் காரணத்தையும் அதை ஒட்டிய பொருண்மையியல் அறிவையும் புலப்படுத்த, நிலைக்களம் உவமை தோன்றுவதற்கான உளவியல்சார் மூல காரணத்தை அதாவது நோக்கம் (motivation) விளக்குவதாக அமைகிறது.

சிறப்பு, நலன், வலி ஆகிய மூன்றும் உவமையைக் கையாளுவதற்கு உவமேயப் பண்புகள் காரணம் ஆனாலும் உவமேயத்தின் சிறப்பை உவமானமே விளக்கும். காதல் என்பது உவமேயம் சிறப்பாக இல்லாவிட்டால் தன்னுடைய காதல் காரணமாக உவமானப்படுத்துவது.

இன்னொரு நிலையில் சிறப்பு, நலன், காதல் ஆகிய மூன்றும் மேனிலைச் சொற்களே வலி என்பதை முன்னவைபோல மீச்சொல்லாகக் கொள்ளமுடியுமா என்ற ஐயம் எழுகிறது. அதிகமாக ஒரு உட்சொல்லும் மீச்சொல்லாய் சில உட்சொற்களைப் பெறும். பழம் ஒரு மீச்சொல், மாம்பழம் ஒரு உட்சொல். ஆனால் ஒட்டு, நீலம், ருமேனியா, மல்கோவா போன்ற பல வகை இருப்பதால் மாம்பழம் என்பதும் ஒரு மீச்சொல்லாக அமைகிறது. அந்த முறையில் வலி என்பது ஒரு மீச்சொல் ஆகும்.

*'உவமம் கூறுதற்கு அடிப்படையான உணர்வு நிலையாகிய இடம்'* என்ற வெள்ளைவாரணர் (1985;30 அகு) விளக்கமும் பேசுவோரின் நோக்கு என்பதை வலியுறுத்துவதாகக் கொள்ளலாம் அப்படியானால் பேசுவோன் உவமையைப் பயன்படுத்துவதற்கான காரணம் அல்லது நோக்கம் என்று ஆகும்.

உதாரணங்களைப் பொறுத்த வரையில் இளம்பூரணர் தந்த மூன்றைப் பேராசிரியர் ஏற்றுக் கொண்டுள்ளார்.

**2.1.1. சிறப்பு :**

"முரசு முழங்கு தானை மூவரும் கூடி/அரசவை இருந்த தோற்றம் போலப்/பாடல் பற்றிய பயனுடை எழாஅல் (கோடியர் தலைவ) (மூவேந்தர்களும் ஒன்றுகூடி அரசவையில் இருந்தது போலப் பாடலோடு தொடர்புடைய இனிய ஓசை, பொருநர்ஆற்றுப்படை, 54–57) என்பதை

இளம்பூரணர் *'சிறப்பு பற்றி வந்தது'* என்று மட்டும் கூற *'சிறப்பினாற் பெற்ற உவமம்'* ஆதலின் சிறப்பு நிலைக்களனாய்ப் பிறந்தது, என்று பேராசிரியர் கூறியுள்ளார்

சேர சோழ பாண்டியர் மூவரும்.. தம்மில் ஒன்று கூடி அரசவையில் இருந்த தோற்றம் போல ஆடல் பாடல், இயம் (வாத்தியம்) இம்மூன்றும் பிரிவின்றி ஒத்து நிகழும் என்பது வெள்ளைவாரணன் (1985:23) விளக்கம்

மூவரால் அரசவை சிறப்புப் பெற்றது போல யாழ் முதலிய துணைக் கருவிகளால் பாடலும் சிறப்புப் பெற்றது என்பது சுந்தரமூர்த்தி (1985:118) விளக்கம்.

உலகத்துள் இயல்பு வகையான் அன்றி விகார வகையாற் பெறும் சிறப்பு என்ற பேராசிரியர் விளக்கப்படி மூவேந்தர்கள் ஒன்று கூடி இருத்தல் பொதுவாக நடக்காத காரியம் என்பதால் உவமானம் தனிச்சிறப்பு பெறுகிறது.

அது உவமேயத்தில் யாழ் முதலியவை பக்கவாத்தியங்கள் என்ற முறையில் சிறப்புப் பெறுவதில்லை. ஆனால் உவமானத்தால் பக்க வாத்தியங்கள் பாடலை ஒத்த சிறப்பு பெறுகிறது என்னும் பொருள் பெறப்படுவது விகார வகை ஆகிறது. ஒன்று கூடாத மூவேந்தர்கள் ஒன்று கூடியிருக்கும் தொழில் சிறப்பு போல் பாட்டுக்கு யாழ் துணைக் கருவியாக இல்லாமல் ஒத்த நிலையில் இருந்து பாட்டைச் சிறப்புச் செய்தது

உண்மையில் இந்த உதாரண அடிப்படையிலேயே சிறப்புக்குச் செயற்கைச் சிறப்பு என்ற விளக்கம் அளித்தாரோ என்று கருதத் தோன்றுகிறது அப்படி இல்லாமல் பொதுவான சிறப்பு என்று கொண்டால் நலன் என்பதிலிருந்து, எப்படி வேறுபட்டது என்று விளக்க வேண்டும். நலன் உளவியல் உணர்வு, சிறப்பு அறிவுசார் உணர்வு என்று மாறுபடுத்தலாம்.

**2.1.2. நலம் :**

*'ஓவத்தன்ன விடனுடை வரைப்பு'* (ஓவியம் போன்ற அழகிய இடம் உடைய நகரம், புறம் 251.1) என்பது நலம் பற்றி வந்தது என்று இளம்பூரணர் விளக்கப் பேராசிரியர் அந்நகரினது செயற்கை நலன் தோன்றக் கூறினமையின் அதற்கு நிலைக்களன் நலன் ஆயிற்று என்று விளக்கியுள்ளார்.

அழகிய இடமுடைய நகரின்கண் ஓவியம் அழகு தருதல் போல அந் நகரின்கண் உள்ள இல்லங்கள் அழகு தருதலின் நலன் பற்றிய உவமை ஆயிற்று சுந்தரமூர்த்தி (மேலது) விளக்கம். அதில் *'ஓவியம் அழகு தருதல் போல அந் நகரின்கண் உள்ள இல்லங்கள் அழகு தருதலின்'* என்பது புதை நிலை வாக்கியத்தை ஒத்துள்ளது. தோற்றநோக்கில் இதை மெய் உவமமாகக் கொள்ளலாம் அதனால், *'ஓவியம் அழகு தருதல் போல அந்நகரின்கண் அழகு தரும் வடிவு உடைய இல்லங்கள்'* என்று கொள்வது பொருத்தமாக இருக்கும் அதாவது நகரத்தின் வடிவ அழகு பேசுபவரைக் கவர்ந்ததன் வெளிப்பாடு என்பது பேசுபவர் மனதில் உள்ள கருத்தை வெளிப்படுத்துவதோடு கேட்பவர் சரியான சூழலால் புரிந்து கொள்கிற கருத்தை வெளிப்படுத்துவதாகவும் அமைந்துவிடுகிறது.

## 2.1.3. காதல் :

*'கண் போல் ஒருவன் உளன்'* என்பது காதல் பற்றி வந்தது என்பது இளம்பூரணர் விளக்கம் கண் முக்கியமான உறுப்பாக இருப்பது போல் ஒருவன் முக்கியமானவனாக இருக்கிறான் என்று பொருள். முக்கியமான உறுப்பு என்பது பொதுப் பண்பு என்பதால் பண்பு உவமை என்று கொள்ளலாம். மேலும் ஒருவனைக் கண் எனக் கூறுவதற்கு அவன் மேல் காதல் என்பதால் காதல் காரணமாகக் கண் முக்கியமான உறுப்பாக இருப்பது போல், ஒருவன் முக்கியமானவனாக இருக்கிறான் என்று பொருள் பொது கருத்தாடலில் காரணம் முக்கியம் இல்லை என்ற முறையில் வெளிப்படையாகக் கூறவில்லை கேட்பவர்தான் அப்படிக் கூறுவதற்கு உரிய காரணத்தை அவன் சொல்வதற்கு மேலான கருத்தைப் புரிந்து கொள்ள வேண்டும்.

பிற உதாரணங்களை ஏற்றுக் கொண்டுள்ள பேராசிரியர் வேறு உதாரணம் கொடுத்துள்ளதால் அது பொருத்தமான உதாரணமாகக் கருதவில்லை என்பது பெறப்படுகிறது. ஆனால் மேலே விளக்கியபடி பொருள் கொண்டால் பொருத்தமாக அமைந்துவிடும்.

### 2.1.3.1. பேராசிரியர் சான்று :

*'பாவை அன்ன பலராய மாண் கவின்... மகட்கு'* (பாவையை ஒத்த பலர் ஆய்ந்து செய்த மாட்சிமைப்பட்ட அழகு (உடைய மகள்) என்புழி மகள்கட் காதல் காரணமாக உவமை பிறந்தது' என்பது பேராசிரியர் தரும் உதாரணம். அவரே விளக்கியபடி காதல் என்பது *'அந் நலனும் வலியும் இல்வழியும் உண்டாக்கி உரைப்பது'* என்பதால் அது சிறந்த உதாரணமாகத் தோன்றவில்லை.

*'தாம்வீழ்வார் மென்தோள் துயிலின் இனிதுகொல்/தாமரைக் கண்ணான் உலகு'* (குறள் 1103, தாமரைக் கண்ணான் உலகு (அதாவது மோட்ச உலகம்) தன்னை விரும்பும் பெண்ணோடு தூங்குவதிலும் இனியதோ!). இது ஒரளவு உயர்வு நவிற்சி. அதற்குக் காரணம் காதலே. எனவே காதல் காரணமாக அப்படிக் கூறினாலும், காரணத்தை வெளிப்படையாகக் கூறாதது ஒரு கருத்தாடல் உத்தியே. கேட்போர் காதல் காரணமாகக் கூறினான் என்று புரிந்து கொள்வர்.

*'என் யானை என்பதும் அது'* என்பது பேராசிரியரின் இன்னொரு உதாரணம் உண்மையில் ஒரு மனிதரைப் பார்த்து *'என் யானை'* என்றும் விலங்குகளில் பெரிய உருவம் உடையது, பார்ப்பவரை ஈர்ப்பது என்ற முறையில் பேசுபவரைக் கவர்ந்தது என்ற முறையில் உவமையாக உண்மையில் உருவகமாகச் சொல்லியிருக்கிறார். அதாவது *'அவனிடம் உள்ள அன்பால்/காதலால் அவனை யானை போல்/ஆக நான் கருதுகிறேன்'* என்று விரிவாகக் கூற வேண்டியதைப் பேசுபவர் *'என் யானை'* என்று சுருக்கமாகக் கூறியுள்ளார். எனவே புதைநிலை வாக்கியமாகக் கொள்ளலாம்.

ஒருவர் மற்றவரிடம் இன்னொரு மனிதரைப் பற்றி, *'அவர் ரொம்ப நல்லவர்'* என்று சொன்னால், கேட்பவர் அவரைப் பற்றி நல்ல எண்ணம்

இல்லாவிட்டால் *'நீ நினைப்பதுபோல் அவர் அவ்வளவு நல்லவர் இல்லை'* என்று கூறுவார். இங்குப் பேசுபவர் நேரடியாகக் கூறியதை *'நீ நினைப்பது போல்'* என்று கேட்பவர் கூறிய முரண்சொல் கவனிக்கத் தகுந்தது. அதற்குக் காரணம் அப்படி *'உணர்ந்து நினைத்துதான் சொன்னார்'* என்பது கேட்பவர் புரிதலே. எனவே பேசுபவரின் உணர்வுப் புரிதலுக்குக் கேட்பவர் ஒத்த உணர்வு உடையவராக இருப்பது அவசியம்.

தொல்காப்பியமே *'உயர்ந்ததன் மேற்றே உள்ளுங்காலை'* (3) கூறியுள்ளது. உருவகம் என்பது உவமேயம், உவமானத்தை ஒத்த சிறப்பைப் பெறுகிறது என்றும் விளங்கிக் கொள்ள வேண்டும். எப்படியானாலும் என் யானை என்பது பேசுபவரின் காதல் வெளிப்பாடு என்பது தெளிவு. கோவலன் கண்ணகியை *'மாசறு பொன்னே வலம்புரி முத்தே'* (சிலம்பு.2.74) என்று பாராட்டியதும் நல்ல சான்று. *'காதல் என்பது அந்நலனும் வலியும் இல்வழி உண்டாக்கி உரைப்பதும் வலி என்பது தன் தன்மையானே உள்ளது ஒரு வலி எனக் கொள்க'* என்று பேராசிரியர் விளக்கம் நினைவு கூரத் தகுந்தது.

## 2.1.4. வலி:

'அரிமான் அன்ன அணங்குடைத் துப்பின் (திருமாவளவன்) (பட்டினப்பாலை, 298 சிங்கம் போலப் (பகைவர்க்கு) வருத்தத்தை உண்டாக்கும் திருமாவளவன்) என்பது, வலி பற்றி வந்தது என்று இளம்பூரணரும், வலி காரணமாக உவமை பிறத்தலின் என்று பேராசிரியரும் விளக்கியுள்ளார்கள். அதாவது சிங்கம் துப்பு (வலி) உடையதுபோல் திருமாவளவன் வலி உடையவன் என்று பொருள். இங்கு இரண்டு செய்திகள் கவனத்துக்கு உரியவை; i) பொதுமைப் பண்பு உவமேயத்தின் பகுதியாக நேரடியாக உள்ளது. ii) சிங்கம் வலி உடையது என்பது உலகம் அறிந்த செய்தி. அதனால் உவமை புறநிலைக் காரணம், தோற்ற உவமை நோக்கில் பண்பு என்பதே பொருந்தும். இங்கு நிலைக்களம் எதுவும் இல்லை.

உண்மையில் சிறப்பு, நலன், காதல் ஆகியவை மேனிலைச் சொல்லாக அமைந்து அவை உவமை தோன்றுவதற்கு மூல காரணமாக அமைந்திருக்கும். இங்கு வலி தோற்ற அடிப்படையால் அமைந்துள்ளதால் நிலைக்களன் வகையாகச் சேர்த்தது விவாதத்துக்கு உரியது.

## 2.2. கிழக்கிடு பொருள் :

நிலைக்களனின் அடுத்த சூத்திரம் *'கிழக்கிடு(ம்) பொருளோடு ஐந்தும் ஆகும்'* என்பது. இங்கு *'கிழக்கு'* என்பது சங்க காலத்தில் திசையைக் குறிக்காமல் கீழான அல்லது தாழ்ந்த பொருள் என்று வழங்கியது என்பது ஒரு வரலாற்று உண்மை. அதனால்தான் பேராசிரியர் குறுந்தொகையிலும் (357,1,2) *'கிழக்கு'* அதே பொருளை வழங்கியது என்று ஒரு உதாரணத்தை (தலையே/கிளைகுரலே கிழக்கு வீழ்ந்தனவே) எடுத்துக் காட்டி அதன் சரியான பொருளை உறுதிப்படுத்தியுள்ளார்.

சூத்திரக் கருத்தைப் பொறுத்தவரையில், இளம்பூரணர் *'தாழ்ந்த பொருளோடும் உவமை பொருந்தும் இடத்து உவமிக்கப்படும் அதனோடு*

*கூட ஐந்தாம் என்றவாறு'* என்று விளக்கியுள்ளார். அப்படியானால் *'உயர்ந்ததன் மேற்றே உள்ளுங்காலை'* (3) என்ற முன்னுள்ள சூத்திரத்தின் எதிர்நிலை போல் அமைந்துள்ளது. அதனால் உவமையைக் கையாளுவதில் கட்டுப்பாடு இல்லை என்று ஆகிறது. அப்படியானால் இந்தச் சூத்திரங்களின் அவசியம் என்ன? இதை நிலைக்களமாகக் கருதுவது எப்படி? என்ற கேள்விகள் எழுகின்றன.

*'ஒரு பொருளின் இழிவு கூறுவான் உவமத்தான் இழிபு தோற்றுவித்தலின் அதுவும் நிலைக்களம் என்றவாறு'* என்பது பேராசிரியர் விளக்கம். அதாவது பேசுவோர் கருத்தாடல் நோக்குக்கு உவமை ஒரு கருவி ஆகிறது.

இங்கு ஒரு பொருளின் இழிபு கூறுவான் என்பதால் தாழ்ந்த பொருளை உவமை கூறுவதற்கு ஒரு நோக்கம் புதைந்துள்ளது என்றும் *'உவமத்தான் இழிவு தோற்றுவித்தல்'* என்னும் போதும் பேசுவோர் நோக்கம் நிறைவேற்றப் பயன்படுத்துதல் என்ற கருத்து புதைந்துள்ளது. அந்த நிலையில் சிறப்பு என்பதன் எதிர்மறையாக அமையும்.

இளம்பூரணரின் இந்தச் சூத்திரத்தில் தொடர் விளக்கம் இங்கு பொருந்தாது என்று வெள்ளைவாரணன் (1985:24) *'ஏடு எழுதுவோரால் நேர்ந்த பிழையாதல் திண்ணம்'* என்று குறிப்பிட்டுள்ளார். பேராசிரியர் உதாரணம்:

1) *'உள்ளூது ஆவியிற் பைப்பய அணுகி (மதுகை மாய்தல் வேண்டும்'* அகநானூறு, 71, 4–5, கண்ணாடியில் வாயினால் ஊதிய ஆவியைப் போல் வீரம் குறைய வேண்டும்) எனவும், *'அரவு நுங்கு மதியின் நுதல்ஒளி கரப்ப'* (அகநானூறு, 315.7, பாம்பு விழுங்கிய நிலாப் போல் (தலைவியின்) நெற்றி ஒளி இழப்ப), எனவும் வரும். இவை பொருள் (உவமேயம்) அன்றி உவமையும் கிழக்கிடப்பட்டனவால் எனின், 2) அங்ஙனமாயினும் அவை பொருளோடு சார்த்தி நோக்க உயர்ந்தன எனப்படும் என்பது பேராசிரியர் உதாரணமும் விளக்கமும். (விவாதத்தில் குறிப்பிடுவதற்கு எண் கொடுக்கப்பட்டுள்ளது).

1. இங்கு உவமானம் உலக இயல்பு நிகழ்வு. ஆனால் உவமேயங்கள் இழிவு கருதியவை என்பதில் கருத்து மாறுபாடு இருக்க முடியாது. உவமைத் தோற்ற நோக்கில் (மாய்தல், ஒளி கரத்தல்) வினை உவமை. ஆனால் உண்மையில் அவை பேசுவோரின் மன உணர்வைப் பொறுத்த வரையில் மனதில் இழிவு புதைந்துள்ளது. அதுவே உவமானத் தேர்வுக்குக் காரணம். அதனால்தான் *'உவமத்தான் இழிபு தோற்றுவித்தல்'* என்று குறிப்பிட்டுள்ளார். எனவே நிலைக்களம் என்பது ஒருபொருள் பற்றிய மதிப்பீட்டு உணர்வு. அதாவது நிலைக்களத்தால் உவமை தோற்றம் பெறுகிறது. தோற்றம் வினை, பயன் முதலிய வழிகளால் புலப்படுத்தப்படும்.

மொழி அமைப்பு நோக்கில் பேசுபவரின் முழுக் கருத்தும் புதைநிலையில் அமைய வேண்டும் என்ற முறையில் *'உள்ளூது ஆவியிற் பைப்பய அணுகி'* என்பதன் புதை நிலை வடிவம் *'உள்ளூது ஆவி மாய்தல் தொழில் இழிவு போலப் பைப்பய அணுகிமாய்ந்த தொழில் இழிவு பெற்றது'* என்று அமையலாம்.

*'அரவு நுங்கு மதியின் நுதல்ஒளி கரப்ப'* (அகநானூறு 313.7) எனவும் வரும் என்பது பேராசிரியர் கூடுதல் உதாரணம். பாம்பு விழுங்கிய திங்களைப் போலப் (பிரிவிடை வேறுபட்ட தலைவியின்) நுதல் ஒளி இழந்தது என்பது பொருள். பாம்பு விழுங்கியது என்பதால் இழிவு என்பது பொருத்தமாகப்படவில்லை. அது அந்தக் கால நம்பிக்கை. உண்மையில் தலைவன் பிரிவே நுதல் ஒளி கரப்பக் காரணம். எனவே சிறந்த உதாரணமாகத் தோன்றவில்லை. 'அறன்அழீஇ அல்லவை செய்தலின் தீதே/ புறன்அழீஇ பொய்த்து நகை' (குறள் 182 அறத்தை அழித்துத் தீயவை செய்தலைவிடத் தீயது, புறத்தே பழி பேசித் தீயவை செய்வது)

'உவமானம் கிழக்கிடு பொருளாக இருந்தாலும், உவமைக் கருத்தாடல் என்ற முறையில் வழக்கமாக அங்கு உவமேயத்தை விட உவமானப் பொருளே உயர்ந்தது என்ற கருத்து பொருந்தும் என்பதாம்' என்பது பேராசிரியரின் கூடுதல் விளக்கம். அதாவது இழிபில் ஊர் அறிந்தது உவமானம். உவமேயத்தின் இழிவு இப்போதுதான் தெரிய வந்திருக்கிறது என்று பொருள். அது உவமையின் பொதுப் பண்பு. அதன் மூலம் பொதுவான ஒரு கூற்று தனி நிலையில் அதாவது சூழல் அற்ற நிலையில் உணர்த்தும் பொருளுக்கும் கருத்தாடல் பகுதியாக உணர்த்தும் பொருளுக்கும் மாறுபாடு உண்டு என்பது ஒரு பொது உண்மையே.

## 2.3. பெருமையும் சிறுமையும் :

> ***'பெருமையும் சிறுமையும் சிறப்பிற் றீரா***
> ***குறிப்பின் வரூஉ நெறிப்பாடு உடைய'*** (உவம.10)

என்ற சூத்திரத்தில் உள்ள *'சிறப்பு'* என்ற நிலைக்களத்தின் கூடுதல் விளக்கமாக அமைகிறது. இளம்பூரணர் பதவுரையில் 'சிறப்பு என்னும் நிலைக்களத்து' என்று கொள்ளப் பேராசிரியர் பொதுச் சொல்லாகக் கொண்டு *'சிறப்பு உடைமையில் தீராவாகி'* என்று விளக்கியுள்ளார். இருந்தாலும் பெருமை என்பது நேரடியாகச் சிறப்பு என்பதோடும் சிறுமை என்பதைக் கிழக்கிடு பொருளோடும் இணைத்துப் பார்க்கலாம்.

முதலில் உரையாசிரியர்கள் கருத்தைப் பார்க்கலாம். அவர்கள் இருவரும் இறப்ப உயர்தலும் இறப்ப இழிதலும் என்றே பொருள் கொண்டுள்ளது பெருமை, சிறுமையின் உள் வகைகளாக அல்லாது உட்சொற்களாக அமைகிறது.

### 2.3.1. இளம்பூரணர் :

உவமையும் பொருளும் ஒத்தன கூறலே அன்றிப் 1)பெருகக் கூறலும் சிறுகக் கூறலும் மேற்சொல்லப்பட்ட சிறப்பு நிலைக்களத்து 2) நீங்காச் சிறப்பின் வரூஉம் வழக்கப்பாட்டினை உடைய என்றவாறு. 3) எனவே வழக்கின் பயின்றுவாராக இறப்ப உயர்தலும் இறப்ப இழிதலும் ஆகா என்றவாறு... நெறிப்பாடு இன்றி வருவன இறப்ப உயர்தலும் இறப்ப இழிதலும் என இருவகைப்படும் என்பது இளம்பூரணரின் விளக்க வாசகம்.

அதாவது பெருமை/சிறுமை என்பவைகளைக் கோட்பாட்டு உள்வகைப்படுத்தி அவைகளை வழக்கு நோக்கு நிலையை இளம்பூரணர் விளக்குகிறார் என்று கொள்ளலாம்.

1) பெருகக் கூறல், இறப்ப உயர்தல் என்று பெருமையில் இரண்டு வகைப்படுத்தி முன்னது *'வழக்கப்பாட்டினை உடைய'* என்றும் பின்னது வழக்கின் பயின்று வாராதது என்றும் கொண்டுள்ளார். அதுபோலச் சிறுகக் கூறல், இறப்ப இழிதல் என்று சிறுமையில் இரண்டு வகைப்படுத்தி முன்னது 'வழக்கப்பாட்டினை உடையது/தக்கது' என்றும், பின்னது வழக்கின் பயின்று வாராதது 'உவமை கூறப்படாதது' என்றும் கொண்டுள்ளார்.

'அவாப் போல் அகன்று அதன் அல்குன் மேற் சான்றோர்/உசாப் போல உண்டே மருங்குல் (ஒருவருடைய ஆசை போல அல்குல் மிகவும் அகன்றது, அவளுடைய இடை சான்றோர்களின் நுட்பமான தேடுதல் போல உள்ளது) என்ற வழி அல்குல் பெரிது என்பான் ஆசையோடு உவமித்தலின் இது தக்கது ஆயிற்று. மருங்குல் நுண்ணிது என்பான் சான்றோர் உசாவோடு உவமித்தலின் அதுவும் தக்கது ஆயிற்று. அவை சிறப்புப் பற்றி வந்தன' என்பது பெருமைக்கு ஏற்றுக் கொள்ளக் கூடியதற்கு உரிய இளம்பூரணர் உதாரண விளக்கம். அது உவமை ஏற்றுக் கொள்ளத்தகுந்தது என்ற முறையில் தக்கது என்ற முறையில் அமைந்துள்ளது.

பேராசிரியர் இதே உதாரணத்தை எடுத்துக்காட்டி 'உலகத்தார் அவாப் போலப் பெரிதாகிய அல்குல் எனக் கழிபெரும் பரப்பிற்றாகக் கூறினும் அது சிறப்பில் தீரா குறிப்பிற்று ஆதல் வழக்கு உண்டாகலின் உடம்படப்படும்' என்ற விளக்கத்தால் அல்குல் எனக் கழிபெரும் பரப்பிற்று என்று உவமேயம் மிகைப்படுத்தப்பட்டதற்குக் காரணம் பேசுபவர் அதன் மேல் வைத்துள்ள விருப்பம் என்று கூறுவதால் பேசுபவரின் மன உணர்வு கூடுதலாக அமைந்து சிறப்பு நிலைக்களமாக அமைகிறது. மேலும் பரந்தது என்ற முறையில் தொழில் உவமமாகவும், பரப்பு உடையது என்ற முறையில் பண்பு உவமமாகவும் தோற்றம் என்ற முறையில் அமையும்.

'இந்திரனே போலும் இளஞ்சாத்தன்' சாத்தற்கு/மந்தரமே போன்று இலங்கும் மல்லாகும்–மந்தரத்துத்/தாழருவி போன்றுளது தார்மாலை, அம்மாலை/ஏழுலகும் நாறும் இனிது, (கீழ் மகனாகிய சாத்தனைக் குல மன்னராக உவமிக்கப்பட்டுள்ளது). இஃது இறந்து வருதலின் இவ்வாறு கூறப்படாது என்பது இறப்ப உயர்தல் உவமை ஏற்றுக் கொள்ளக் கூடாததற்கு உரிய இளம்பூரணர் உதாரணமும் விளக்கமும். தோற்ற நிலையில் தொழில் உவமம் ஆகும். அது சமூக உணர்வு அடிப்படையில் ஏற்றுக் கொள்ளத் தகுந்தது என்றாலும் பேசுபவரின் உணர்வு என்ற நிலையில் இல்லாததை உண்டாக்கி உரைப்பது என்ற முறையில் சிறப்பு நிலக்களத்தில் உள்வகையாக இறப்ப உயர்வு என்ற வகையைச் சாரும். பேராசிரியர் இந்த உதாரணத்தை ஏற்றுக் கொள்ளவில்லை.

'வள்ளெயிற்றுப் பேழ்வாய் ஞமலிக்கு மான்குழாம்/எள்ளி இரிவது போல் எங்கெங்கும்–வள்ளற்கு/மாலார் கடல்போல மண்பரந்த வாட்டானை/மேலாரு மேலார் விரைந்து' (நாயை மான் கூட்டம் எள்ளுவது போல் வள்ளலை வாள் படையை உடைய அரசன் இகழ மாட்டான்). இங்கு வள்ளல், நாயோடு உவமிக்கப்பட்டுள்ளது. எனவே 'இஃது இறப்ப இழிதலின் இதுவும் ஆகாது' என்பது இளம்பூரணர் விளக்கம். சிறுமையில்

ஏற்றுக்கொள்ளக் கூடாததற்கு உரிய உதாரணம் இங்கும் பேசுபவரின் உணர்வு கருத்தில் கொள்ளப்படவில்லை. பேராசிரியர் இந்த உதாரணத்தையும் ஏற்றுக்கொள்ளவில்லை.

'அஃதேல் நாயனையார் கேண்மை தழீஇக்கொளல் வேண்டும்' (நாலடியார், 213) என வருமால் எனில் அது நாயின்கட் கிடந்ததோர் நற்குணம் பற்றி வருதலின் இறப்ப இழிதல் ஆகாது என்பது இறப்ப இழிந்தது ஏற்றுக் கொள்ளப்படாததற்கு உரிய இளம்பூரணரின் இன்னொரு உதாரணமும் விளக்கமும். அது சிறுமை என்பதால் கிழக்கிடுதல் என்ற நிலைக்களத்தில் ஒரு உள் வகையாகக் கொள்ளலாம்.

பேராசிரியர் 'யானை அனையவர் நட்பு ஒரீஇ'... என்ற கூடுதல் அடியையும் (நாலடியார், 213) எடுத்துக்காட்டி 'இவைபெருமையும் ('யானை அனையவர் நட்பு ஒரீஇ') சிறுமையும் 'நாயனையார் கேண்மை தழீஇக் கொளல் வேண்டும்') சிறப்பில் தீராக் குறிப்பு ஆதலின் அமைந்தன என்பது என்று விளக்கியுள்ளார். தோற்ற அடிப்படையில் பண்புஉவமை. நிலைக்களன் அடிப்படையில் பெருமையும் கிழக்கிடுதலும் புதைந்துள்ளன என்று கொள்ளலாம்.

## 2.3.2. பேராசிரியர் :

'இறப்ப உயர்வும், இறப்ப இழிவும் உவமிக்குங்கால் இன்னாவாகச் செய்யாது சிறப்புடைமையில் தீராவாகிக் கேட்டார் மனங்கொள்ளு மாற்றான் வருதலை வழக்கு வலியதாக உடைய' என்பது பேராசிரியர் பதவுரை விளக்கம் இளம்பூரணர் போல உயர்வு/இழிவு, இறப்ப உயர்வு/ இறப்ப இழிவு என்று இரண்டு வகைப்படுத்தவில்லை என்பதையும், பேசுவோர் உவமையைப் பயன்படுத்தும் நோக்கம் கேட்டார் மனங்கொள்ளு மாற்றான் வருதலை வழக்கு வலியது ஆக முக்கியத்துவம் பெறுவது என்பதையும் புலப்படுத்துகின்றன.

### 2.3.2.1 அவர் காட்டிய புதிய உதாரணங்கள் :

1. 'மாக்கடன் நடுவண் எண்ணாட் பக்கத்துப்/பசுவெண் திங்கள் தோன்றியாங்கு/கதுப் பயல் விளங்குஞ் சிறு நுதல்' (குறுந்தொகை. 129.3–5 கரிய கடல் நடுவிலே எட்டாம் நாள் வெள்ளிய சந்திரன் தோன்றியது போலக் கூந்தலின் பக்கத்தே தோன்றும் சிறிய நெற்றி) என்ற வழி கடல் போன்றது கூந்தல் எனவும், கடல் நடு எழுந்த எண்ணாட் பக்கத்து மதி போன்றது நுதல் எனவும் கூறினான். அதனாற் கடல் போலும் மயிர் என்றதும் பல காவதப் பரப்பு உடைய மதி போன்றது நுதல் என்றதும், கழியப் பெரியவ ஆயினும், அது வழக்கு ஆதலிற் சிறப்பில் தீராது மனங்கொள்ள வந்தது எனவே படும் என்பது பேராசிரியர் உதாரணமும் விளக்கமும். உவமையான கடல் போன்றது கூந்தல் கடல் நடு எழுந்த எண்ணாட் பக்கத்து மதி போன்றது நுதல் என்பவை *'கழியப் பெரியவ'* (இளம். இறப்ப உயர்தல்) என்று ஒத்துக் கொண்டாலும் அது வழக்கு ஆதலிற் சிறப்பில் தீராது மனங் கொள்ள வந்தது 'அதாவது வழக்கில் இருப்பதால் சிறப்பு என்ற தோற்ற வகையைச் சார்ந்ததாக' ஒத்துக் கொள்கிறார்.[1]

2. 'சான்றோர் உசாஅப் போல் உண்டே நுகப்பு' (சான்றோர்கள் நுண்மையான ஆய்வு போல (பெண் இடை) என்ற வழியும் நுண்ணுணர்வின் ஆராய்ச்சி) ஒருவர்க்குப் புலனாகாததனை ஒக்கும். இடை என்றமையின் அதுவும் கழியச் சிறிது ஆக உவமித்தார், என்பது என்பதற்குப் பேராசிரியர் உதாரணமும் விளக்கமும். இங்குக் 'கழியச் சிறிது' என்பது இளம்பூரணர் கூறும் இறப்ப இழிவு என்பதுதான். இதன்படி கிழக்கிடுதல் நிலைக்களத்தில் ஒரு உள் வகை என்று கொள்ளலாம். மெய் (வடிவு) என்ற தோற்றம் வகையைச் சாரும்.

3. இவ்வாறு அன்றி 'மேருமால் வரை காம்பு ஒத்து, விண் முகடு குடை ஒத்து, விண்மீன் கணம் முத்துப்போன்றன' என வடிவு பற்றி உவமங் கூறுதல் தமிழ் வழக்காகின்றது என்பது, பேராசிரியர் விளக்கம். மேருமலை=காம்பு, விண் முகடு (மேல்தட்டு)=குடை, விண்மீன் கணம்=முத்து அகியவை வடிவ உவமைகள். இவையும் வடிவ நிலையில் இறப்ப உயர்வுதான்.

'தமிழ் வழக்காகின்றது' என்பதை வெள்ளைவாரணனார் (1985. 31 அகு) 'இக்காலத்தில் தமிழ் வழக்காக இடம்பெற்று வருகின்றது எனப் பேராசிரியர் தம் காலத் தமிழ் இலக்கியங்களில் புதுவதாக வேரூன்றி வரும் உவமை மரபினைக் குறித்துள்ளார் எனக் கொள்ளுதல் பொருந்தும்' என்று கூறச் சுந்தரமூர்த்தி (1985:128 அகு) 'தமிழ் வழக்காகின்றதன்று என்றிருப்பின் பொருந்தும்' என்று விளக்குவது எதிர்மறை பொருள்பட்டு அந்த வழக்கை ஏற்றுக் கொள்ளவில்லை என்று ஆகிறது.

4. 'சுரும்பு மூசாச் சுடர்ப் பூங்காந்தள்' (திருமுருகாற்றுப்படை 43) (முருகன் விரும்பும் ஆதலின்) வண்டுகள் மொய்க்காத சுடர் (போன்ற) காந்தள் பூக்கள்) என்பதும் அது, என்பது பேராசிரியர் காட்டும் மற்றொரு உதாரணம். அதாவது இது கழியப் பெரியது என்பதும் ஏற்றுக் கொள்ளத் தகுந்தது என்பதும் அவர் கருத்து.

5. 'வள்ளத்தின் நீர்கொண்டு உமிழ்ந்த முலைச்சாந்து மறுகில் பரந்து/அள்ளல் யானை எல்லாம் அடிவழுக் கினவே' என்பதோ எனின் 'அவ்வாற்றானும் இன்பம் கொள்வார்க்கு அவையும் இழுக்கு. 'சிறு தோணியில் நீர் கொண்டு முலையில் பூசப்பட்ட சாந்தில் வீசிய நீர் வெள்ளமெனப் பரவியதால் யானை கால் வழுக்கி விழுந்தன' என்பது பேராசிரியர் உதாரணமும் விளக்கமும். இங்கு உவமை அமையவில்லை.

6. 'சோறு ஆக்கிய கொழுங் கஞ்சி/யாறு போலப் பரந்து ஒழுகி' (பட்டினப்பாலை. 44/45) சோறு வடிக்கும்போது ஒழுகும் கஞ்சி ஆறுபோல் பரந்து ஓடுவதால்...) என்பதோ எனின் யாறு என்ற துணையானே பேர்யாறு எனக் கொண்டு உலகு இறந்தனவாக அமைக்கன்றே 'ஏறு பொரச் சேறாக்கி/தேரோடத் துகள்கெழுமி' '(பட்டினப்பாலை. 46/47) என்பது ஆயிற்று' என்பது பேராசிரியர் உதாரணமும் விளக்கமும்.

'சோறு ஆக்கிய கொழுங் கஞ்சி/யாறு போலப் பரந்து ஒழுகுதல் என்ற உவமை அவர் கருத்துப்படி கழிய பெரியது. அத்தோடு அதை ஒட்டி அடுத்த இரண்டு அடியும் மிகைப்படுத்தலாக அதாவது *'கழிய பெரிய'*வாக அமைந்துள்ளது. அது உண்மையின் அரசனின் வள்ளன்மையின் மிகைப்பாடு என்ற பொருள் எச்சம்.

தொல்காப்பியம் *'சிறப்பில் தீரா'* என்று பெருமை/சிறுமைகளைத் தனி வகைகளாகக் கூறியது ஏன் என்ற கேள்வி எழுகிறது. அதை மனதில் கொண்டே உரையாசிரியர்கள் இறப்ப உயர்வு, இறப்ப இழிவு என்று பொருள் குறுக்கம் செய்து உள் வகைகளாக விளக்கி நியாயப்படுத்த முயன்றுள்ளார்கள்.

**2.4 புது வகை :**

மாறாக இந்திர மனுவேல் (1997: 93) சிறப்பு, நலன் ஆகியவைகளை உவமை உருவாக்கத்து ஆணி வேர் (root causes of simile formation) என்று குறிப்பிட்டுவிட்டு உவமவியலிலேயே *'பெருமையும் சிறுமையும் மெய்ப்பாடு எட்டன்/வழி மருங்கு அறியத் தோன்றும் என்ப'* என்ற சூத்திரத்தையும் (19) மேலைச் சூத்திரத்தையும் (10) சேர்த்து, அவை உவமானத்தைப் புகழும் அல்லது இகழும் முறை என்று கொண்டு (mode of praising the vehicle or ridiculing) ஸ்டீபன் உல்மன் (Stephen Ullmann) கூறும் உவமையின் குரல் (tones of simile) என்ற தனிவகையாக அமைத்துள்ளார். (ப.94) அதற்கு ஆதரவாக வடமொழி காவ்யலங்காரம் குறிப்பிடும் புகழ்தல், இகழ்தல், உண்மை நிலை உரைத்தல் (describing the real state of things) என்ற வகையில் அடங்கும் என்று குறிப்பிட்டுள்ளார்.

உண்மையில் உல்மன் கருத்து வேறு, காவ்யலங்காரக் கருத்து வேறு. தமிழில் தண்டியலங்காரம், வீரசோழியம் ஆகிய இரண்டும் புகழ்தல், இகழ்தல், உண்மை நிலை உரைத்தல் ஆகியவைகளை உவமை வகைகளாகக் குறிப்பிட்டுள்ளன. தண்டியலங்காரம் (32) குறிப்பிட்டுள்ள 24 உவமை வகைகளில் புகழ், நிந்தை, உண்மை மூன்றும் அமைந்துள்ளன. வீரசோழியமும் (154) புகழ்ச்சி, பழிப்பு, உண்மை ஆகியவைகளை உவமை வகைகளில் சேர்த்துக் கூறியுள்ளது.

அதனால் குரல் என்பது உல்மன் கருத்தாகவே கொள்ள வேண்டும். மேலும் குரலால் பெருமை/சிறுமை புலனாகுமே தவிர அவை குரல் அல்ல.

தொல்காப்பிய உருவாக்கம் பற்றிய ஒரு சிக்கல். இது போல எழுத்து, சொல் அதிகாரங்களிலும் உண்டு. தொல்காப்பியரே தோற்ற வகைகளை முதலில் வினை, பயன், மெய், உரு (1) கூறிவிட்டுப் பின்னர் அவைகளைக் கூறும்போது வினையினும் பயத்தினும் உறுப்பினும் உருவினும்/பிறப்பினும் வருஉம் திறத்தியல் என்ப (25) கூறியுள்ளதில் சொல்லெழுத்து மாற்றம் (பயன்–பயம்) சொல் மாற்றம் (மெய்–உறுப்பு) கூடுதல் வகை (பிறப்பு) காணப்படுவது குறிப்பிடத்தகுந்தது.

3. முடிவுரை :

நிலைக்களம் என்பது பேசுவோர் உவமையைப் பயன்படுத்தும் நோக்கம் என்று கொள்ளலாம்.[1]

1. படித்துக் கருத்துரைத்த முனைவர் இரா.இராஜா (பிஷப் கல்லூரி, திருச்சி) அவர்களுக்கு என் நன்றி.

துணையன்கள் :


சுந்தரமூர்த்தி, கு.(ப-ர்) 1985, தொல்காப்பியம் பொருளதிகாரம் பிற்பகுதி பேராசிரியர் உரை (குறிப்புரையுடன்), அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அ நகர்.

தமிழண்ணல், 2003, சங்க இலக்கிய ஒப்பீடு (இலக்கியக் கொள்கைகள்), மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, நான்காம் பதிப்பு, 2014.

வெள்ளைவாரணன், க(ப-ர்) 1985, தொல்காப்பியம் உவமையியல் உரை வளம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை.

Indra Manuvel 1997 Literary Theories in Tamil. Pondicherry Institute of Linguistics and Culture, Pondicherry


## வாழ்த்துகிறோம்

**"திறமான புலமையெனில் வெளிநாட்டோர் அதை வணக்கஞ் செய்தல் வேண்டும்"— பாரதி**

**-பேரா.ப.மருதநாயகத்திற்கு வாழ்த்து**

2016 டிசம்பர் இதழில் பேராசிரியர் ப.மருதநாயகம் அவர்களுடைய "*புறநானூறு மூலத்தொகுப்பின் சிறப்பு*" என்னும் கட்டுரையை வெளியிட்டு செந்தமிழ் இதழில் அப்பெருமகனாரைக் குறித்து ஆசிரியர், "பேராசிரியர் ப.மருதநாயகம் தமிழ், ஆங்கிலம் ஆகிய இருமொழிகளிலும் ஆழ்ந்த புலமையும் கற்றலும், கற்பித்தலும் ஆகிய ஒழுங்கினை முறைப்படுத்திக் கொண்ட சான்றோர்; ஆசிரியர் உலக முழுவதுமுள்ள கல்வியாளர்கள் பல்கலைக்கழகங்களோடு நெடிய தொடர்பும் ஆங்குச் சென்று உரைநிகழ்த்தும் கல்விப்புலமையும் உடைய அறிஞர்" என்று அவரைப் பற்றிச் செய்தி வெளியிட்டிருந்தோம். அப்பெரியார் 10.4.2017இல் அமெரிக்கப் பயணத்தை மேற் கொண்டுள்ளார். அமெரிக்காவிலுள்ள உலகப் புகழ் வாய்ந்த ஹார்டுவேர் பல்கலைக் கழகத்தில் '*சங்க இலக்கியம்*' பற்றி கட்டுரை வழங்க அழைத்திருக்கிறார்கள். ஆங்கு வெளிவருகின்ற கட்டுரைகள் நூல்வடிவம் பெறும். பேராசிரியர் ப மருதநாயகம் மே மாத இறுதியில் சென்னை திரும்புகிறார். அப்பேராசிரியரின் கல்விப் பயணம் இனிதே வெற்றி பெற மதுரை நான்காம் தமிழ்ச் சங்கமும் செந்தமிழ் இதழும் வாழ்த்துகிறது.

# உரை மரபும் மொழி மரபும்

பேராசிரியர்.**இரா.கோதண்டராமன்,**
தொல்காப்பியர் அடிப்படை ஆய்வு மையம்,
19, தொல்காப்பியர் தெரு, அசோக்நகர்,
புதுச்சேரி–605008
கைபேசி : 94431 51044

## 1.0 மொழி மரபுக்கு இசைந்த உரை மரபு :

**1.1.** உரையானது காண்டிகை, விருத்தி என இரு வகைப்படும். இந்த இரு வகை உரை மரபும் பொதுவாக இலக்கணத்தை ஒட்டியதாகும். இலக்கியத்தைப் பொறுத்தவரை இந்த இரண்டு உரைகளும் எந்த அளவிற்குப் போற்றப்படுகின்றன என்பது ஆய்வுக்குரியதாகும். இங்கே இத்தகைய ஆய்வினை நாம் மேற்கொள்ளவில்லை. ஆயினும் இலக்கியத்திற்கு, சிறப்பாகத் தொன்மை சார்ந்த இலக்கியத்திற்கு வகுக்கப்படும் உரை எப்படி இருக்க வேண்டும் என்பதைப் பற்றி ஒரு பொதுவான கருதுகோளை நாம் உருவாக்கலாம். இந்தக் கருதுகோள் இலக்கியத்திற்கு வகுக்கப்படும் உரையானது அமைப்பியல் சார்ந்த மொழி மரபுக்கு இசைந்த பொருண்மை விளக்கத்தைக் கொண்டதாக அமைய வேண்டும் என்பதை வலியுறுத்துவதாகும். ஒரு சிறந்த உரை பின்வரும் பகுதிகளைக் கொண்டதாக இருப்பது விரும்பத்தக்கதாகும்.

1. (1) சொற்பொருள் (2)பொழிப்புரை (3)பனுவல் சார்ந்த உரை விளக்கம் (4)திரண்ட கருத்து (5)இலக்கணக் குறிப்பு (6)அரிதான சொல்லாட்சிகளைத் தொகுத்துச் சுட்டல் (7)திணை (8)துறை (9)யாப்பு வகை (10)இறைச்சி (11)உள்ளுறை

**1.2** மேலே குறிப்பிட்ட பகுதிகளில் யாப்பு தவிர்த்த அனைத்தையும் உ.வே.சாமிநாதய்யரின் குறுந்தொகைப் பதிப்பில் காணலாம். எடுத்துக் காட்டாக, *சென்றைக்க* (குறு.383.3) என்ற செய்தைக்க வாய்பாட்டு வினையானது *இருந்தைக்க* (நாலடி.79), *கேட்டைக்க* (சிலம்பு.18.49) எனப் பிற இடங்களில் நிகழ்வதையும் உ.வே.சா.குறிப்பிடுவார். இத்தகைய தொகுப்பானது மொழியியல் ஆய்வாளருக்குப் பெரிதும் பயன்படும். நச்சினார்க்கினியரின் கலித்தொகை உரையானது பனுவல் சார்ந்த உரை விளக்கமாகும். இதனைப் பின்வரும் எடுத்துக்காட்டின் மூலம் விளக்கலாம்.

2. *சீர்கெழு வெண்முத்தம் அணிபவர்க் கல்லதை*
*மலையுளே பிறப்பினும் மலைக்கவைதாம் என்செயும்*
*நினையுங்கா னும்மக ளுமக்குமாங் கனையளே*

(கலி.9.12–14)

இந்தப் பகுதிக்கு நச்சினார்க்கினியரின் மொழி மரபோடு பொருந்திய உரை விளக்கம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

3. "தலைமை பொருந்திய வெள்ளிய முத்துக்கள் அணிவார்க்குப் பயன்படுவதல்லது கடலிடத்தே பிறந்தனவாயினும் அம்முத்தங்கடாம் அக்கடலுக்கு என்ன பயனைக் கொடுக்கும்? ஆராயுங் காலத்து நும்முடைய மகளும் பயன்படும் பருவத்து நுமக்குப் பயன்படாள்."

இத்தகைய உரைமரபு இடைக்கால உரையாசிரியர்களிடம் பெரும்பாலும் காணப்பட்டது. ஆயினும் தொல்காப்பிய இலக்கண விளக்கத்தைப் பொறுத்தவரை உரையாசிரியர்கள் தொல்காப்பியரை அப்படியே ஏற்றுக் கொண்டனர் என்பதை இங்கே குறிப்பிட்டாக வேண்டும்.

தொல்காப்பிய மொழியிலக்கணத்தைப் பொறுத்தவரை சில இடங்களில் மாறுபடுவதற்கு வாய்ப்பு இருந்தும் உரையாசிரியர்கள் தொல்காப்பியரையே வழிமொழியும் போக்கு காணப்படுகிறது. ஓர் எடுத்துக்காட்டின் மூலம் இதனை விளக்கலாம்.

1.3 தொல்காப்பியர் *வகரக் கிளவி நான்மொழி யீற்றது* (எழுத்து.இளம்.81) என்று குறிப்பிடுவார். *அவ்* (=அவை), *இவ்* (=இவை), *உவ்* (=உவை) *தெவ்* ஆகிய நான்கு வகரவீற்றுச் சொற்களை மேற்படி நூற்பா கருத்தில் கொண்டுள்ளது. முன்னதாக *உயிர்ஔஎஞ்சிய இறுதி யாகும்* (எழுத்து.இளம்.69) என்ற நூற்பாவில் ஔகாரம் எஞ்சியவை மொழிக்கு இறுதியாகும் என்ற செய்தியைக் குறிப்பிட்டுவிட்டு அதற்கு அடுத்து நிகழும் *கவவோ டியையின் ஔவும்* ஆகும் (எழுத்து.இளம்.70) என்ற நூற்பாவில் *கௌ, வௌ* ஆகிய இரண்டு சொற்களிலும் ஔகாரம் இறுதியில் நிகழும் என்று தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார். இங்கே வெளிப்படையாக ஒரு முரண்பாடு காணப்படுகிறது. ஔகாரம் மொழியிறுதியில் நிகழாது என்று முந்தைய நூற்பாவில் குறிப்பிட்டுவிட்டு, பிந்தைய நூற்பாவில் ககர வகரங்களை அடுத்தும் ஔகாரம் மொழியிறுதியில் நிகழும் என்று தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார். இளம்பூரணர் இந்த முரண்பாட்டைக் குறிப்பிடவுமில்லை; இதற்கு அமைதி கூறவுமில்லை. உயிர் மயங்கியலில் பின்வரும் இந்த நூற்பா கருத்தில் கொள்ளத்தக்கதாகும்.

> 4. ***ஔகார இறுதிப் பெயர்நிலை முன்னர்***
> ***அல்வழி யானும் வேற்றுமைக் கண்ணும்***
> ***வல்லெழுத்து மிகுதல் வரைநிலை யின்றே***
> ***அவ்விரு ஈற்றும் உகரம் வருதல்***
> ***செவ்வி தென்ப சிறந்திசி னோரே.*** (எழுத்து.இளம்.296)

இந்த நூற்பா *கௌவுக்கடிது/கடுமை, வௌவுக்கடிது/கடுமை* ஆகிய எடுத்துக் காட்டுக்களைக் கருத்தில் கொண்டதாகும். இவற்றில் நிகழும் வகரத்தை உடம்படுமெய்யாகக் கொள்ள வேண்டிய நெருக்கடி ஏற்படுகிறது. ஆயினும் தனிக்குறில் அடுத்து நிகழும் மெய்கள் புணர்ச்சியில் உயிர்முன் இரட்டித்தல் தமிழில் பிந்திய வளர்ச்சியாயினும் அது ஓர் இயல்பான நிகழ்ச்சியாகும். இந்த வகையில் மேற்படி எடுத்துக்காட்டுக்களில் நிகழும் வகரத்தைத் தனிக்குறிலடுத்த வகரத்தின் இரட்டிப்பாகக் கருத வேண்டும். இதனைக் கருத்தில் கொண்டு கௌ, வௌ ஆகியவற்றைக் கவ், வவ் என அமைத்துக்கொள்ள வேண்டும். அப்படிக் கொண்டால்தான் *கௌவு–*, *வௌவு–* ஆகியவற்றில் நிகழும் வகரத்தைத் தனிக்குறிலடுத்த வகரத்தின் இரட்டிப்பாகக் கருத முடியும். இந்த வகையில் *கௌவுக்கடிது/கடுமை, வௌவுக்கடிது/கடுமை* ஆகியவற்றைக் *கவ்வுக்கடிது/கடுமை, வவ்வுக்கடிது/ கடுமை* என்று கொள்ள வேண்டும். அதாவது *கௌ, வௌ* ஆகியவற்றை

*கவ், வவ்* ஆகிய வகரவீற்றுச் சொற்களாகக் கொண்டால்தான் இரட்டித்த வகரத்தை உடம்படுமெய்யாகக் கொள்ளாமல் மொழியிறுதி வகரம் புணர்ச்சியில் உயிர்முன் இரட்டித்த ஒன்றாகக் கொள்ள முடியும். இந்த வகையில் வகரவீறு நான்கு சொற்களில் இறுதியாக நிகழும் என்ற தொல்காப்பியக் கூற்றினை *கவ், வவ்* உட்பட ஆறு சொற்களின் ஈற்றில் நிகழும் என்று கொள்ள வேண்டும். இதனை எழுத்ததிகாரத்துக்கு உரைவகுத்த இளம்பூரணர், நச்சினார்க்கினியர் வலியுறுத்த முயலவில்லை. காரணம் தொல்காப்பியர் காலத்திலும் உரையாசிரியர்கள் காலத்திலும் ஔகாரம் தமிழ் நெடுங்கணக்கில் வேண்டாத விருந்தாளியாக ஆழமாக வேரூன்றிவிட்டது.

1.4 ஒரு தொன்மையான இலக்கியத்திற்கு உரை வகுக்கையில் சில குறிப்பிட்ட வாய்பாட்டுச் சொற்களுக்கான பொருண்மை விளக்கம் நேரிதாக அமையவேண்டும். ஆனால் உரையாசிரியர்களின் நோக்கம் பனுவலை வாசகன் புரிந்துகொள்ள வேண்டும் என்று இருப்பதால் இந்தக் கொள்கை சில சமயங்களில் தளர்த்தப்படுகிறது. இந்த வகையில் பரிமேலழகரின் உரை மரபு எங்ஙனம் மொழி மரபிற்கு ஏற்புடையதாக அமையவில்லை என்பதைச் சில எடுத்துக்காட்டுக்களுடன் இங்கே புலப்படுத்தலாம்.

## 2.0 பரிமேலழகரும் மொழிமரபும் :

**2.1** திருக்குறளுக்கு உரை வகுத்த உரையாசிரியர்களுள் பரிமேலழகர் குறிப்பிடத் தக்கவராவார். *காட்சியவர்* (குறள்.174, 199), *மொய்ம்பினவர்* (குறள்.492) ஆகிய குறிப்பு வினையாலணையும் பெயர்களில் நிகழும் *அவர்* என்பதற்கு உடையார் என உரை வகுத்து அது உடைமைப் பொருண்மையை உணர்த்தும் குறிப்பு வினையாலணையும் பெயர் என்பதைப் பரிமேலழகர் குறிப்பிடுவார். இது வியந்து போற்றத்தக்க மொழி மரபுக்கு இசைந்த உரைக் குறிப்பாகும். குறிப்பு வினைமுற்றானது *உண்மை, உடைமை* ஆகிய இரண்டு பொருண்மைகளை உணர்த்தும். உரிமைப் பொருண்மை இவற்றுடன் பொருந்துமா என்பது ஆய்வுக்குரியதாகும்.

**2.2** *நிலக்கு* (குறள்,570, 572, 1003), *நலக்கு* (குறள்.149) ஆகிய நான்கன் உருபேற்ற சொற்களைப் பரிமேலழகர் *நிலத்துக்கு, நலத்துக்கு* ஆகியவற்றின் விகாரமாகக் கருதுவார். '*நிலக்கு* என்பது செய்யுள் விகாரம்' என்று அவர் குறிப்பிடுவார். (குறள்.570). இதே போல் '*நலத்திற்கு* என்பது *நலக்கு* எனக் குறைந்தது நின்றது' எனவும் பரிமேலழகர் குறிப்பிடுவார். *நிலக்கு, நலக்கு* ஆகிய வடிவங்கள் தொல் தமிழுக்கு உரியனவாகும். இத்தகைய வடிவங்கள் இன்றும் கன்னடத்தில் நிகழ்கின்றன. எ–டு. *மரக்கெ* 'மரத்துக்கு'. இந்த வகையில் பரிமேலழகரின் உரைக்குறிப்பு தமிழ் மொழிமரபுக்கு இசைந்ததாக இல்லை.

**2.3** திருக்குறளின் அதிகாரத் தலைப்புகள் திருவள்ளுவரால் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும் என்ற கருதுகோளின் அடிப்படையில் *தெரிந்து செயல் வகை, பொருள் செயல் வகை, வினை செயல் வகை* ஆகிய அதிகாரத் தலைப்புகள் ஆய்வுக்குரியன. இந்த அதிகாரத் தலைப்புகளில் நிகழும் செயல் என்னும் வினை செய்யும் எனும் பெயரெச்சத்திற்கு இணையானதாகும். இதே போல் *தினற்பொருட்டால் கொல்லா*

*துலகெனின் யாரும், விலைப் பொருட்டால் ஊன்றருவார் இல்* (குறள்.256) என்ற குறட்பாவிலும் தினல் என்பது தின்னும் என்ற பெயரெச்சத்துடன் பொருந்துவதைக் காணலாம். ஏவற்பாற்று (குறள்.515) உணரற்பாற்று (குறள்.11) ஆகியவற்றில் பாற்று என்பதன் முன் நிகழும் *ஏவல், உணரல்* ஆகியவையும் *ஏவும், உணரும்* என்ற பெயரெச்சச் செயன்மையவாகும். இத்தகைய பொருத்தங்களை உரையாசிரியர்கள் சுட்டிக்காட்ட வேண்டும். உரையாசிரியர்கள் ஒரு பனுவலுக்கு உரை வகுக்கும் போது அந்தப் பனுவலின் மொழியமைப்பைக் குறிப்பிடுவதுடன் அதன் பொருண்மையையும் தெளிவுபடுத்த வேண்டும். ஆனால் சில சமயங்களில் பனுவலின் மொழியின் அமைப்பைப் பற்றிக் குறிப்பிடாமல் பொழிப்புரையாக மட்டுமே பனுவலை விளக்கிச் செல்லும் உத்தியும் கையாளப்படுகிறது. மேற்படி குறட்பாவில் தினற்பொருட்டு உலகு கொல்லாது எனின் என்ற பகுதி *'பேதைமை காரணமாகவல்லது ஊன்தின்கை காரணமாக உலகம் கொல்லாதாயின்'* என்று பரிமேலழகரால் விளக்கப்படுகிறது. இங்கே *தினற்பொருட்டு* என்பதில் நிகழும் *தினல்* என்பது *தின்னும்* என்ற பெயரெச்சச் செயல்பாட்டினது என்ற உண்மை குறிப்பிடப்படவில்லை.

2.4 திருக்குறளில் கட்டு (27, 502) (=கண்ணது), *மேற்று* (1027) (=மேலது), *கைத்து* (593) (=கைப்பொருள்), *சூழ்த்து* (745) (=உணவிற்று), *மாட்சித்து* (750) (=மாட்சி உடைத்து), *பாற்று* (11) (=பான்மையை உடைத்து), *வற்று* (1079) (=வல்லது) ஆகிய ஒன்றன்பால் குறிப்பு வினைமுற்றுக்கள் காணப்படுகின்றன. இவற்றின் பொருண்மை சில இடங்களில் குறிப்பு வினையாலணையும் பெயர்களைக் கொண்டும் சில இடங்களில் விரிவுபடுத்தப்பட்ட குறிப்பு வினைமுற்றுக்களைக் கொண்டும் பரிமேலழகரால் விளக்கப்படுகிறது. இந்தப் பொருண்மை விளக்கம் மொழி மரபினைக் கருத்தில் கொண்டதாகத் தோன்றவில்லை. இது தவிர்க்க முடியாத ஒன்றாகும். ஆனால், இவற்றின் அமைப்பு பரிமேலழகரால் எங்கும் விளக்கப்படவில்லை. *கைத்து, சூழ்த்து, மாட்சித்து* ஆகியவற்றின் அமைப்பு முறையே *கை+த்து, சூழ்+த்து, மாட்சி+த்து* என்பதாகும். இதனைக் கருத்தில் கொண்டு *கட்டு, மேற்று, பாற்று, வற்று* ஆகியவற்றின் அமைப்பு *கண்+த்து, மேல்+த்து, பால்+த்து, வல்+த்து* எனக் கொள்ளப்படும். இவற்றில் காணப்படும் இரண்டாவது உறுப்பாகிய *–த்து* என்பது ஒன்றன்பால் விகுதிப் பொருண்மையை மட்டுமின்றி உடைமை, உண்மை ஆகியவற்றில் ஏற்புடைய பொருண்மையையும் உணர்த்துகின்றது.[1]

2.5 *ஒறுக்கிற்பவர்*(779), *செய்கிற்பாற்கு*(515), *நோற்கிற்பவர்* (159), *காண்கிற்பின்*(190), முதலான வினைகள் திருக்குறளில் காணப்படுகின்றன. இந்த வினைகளில் நிகழும் *கிற்பு* என்பது ஆற்றல் பொருண்மையை உணர்த்துவதாகும். அதாவது மேற்படி வினைகள் *ஒறுக்கவல்லவர், செய்யவல்லாற்கு, நோற்கவல்லவர், காணவல்லாராயின்* என்ற பொருண்மையினவாகும். இத்தகைய வினைகளுக்கு உரை வகுக்குங்கால் ஆற்றல் பொருண்மை தோன்ற உரை வகுத்தல் வேண்டும். *நோற்கிற்பவர்* (குறள்.159) என்ற ஆற்றல் வினைக்குப் பரிமேலழகர் *பொறுப்பவர்* (=நோற்பவர்) என்று உரை தந்துள்ளார். ஆனால், *பொறுக்கவல்லவர்* என்பதே இதற்கு ஏற்புடைய மொழி மரபுக்கு இசைந்த உரையாகும்.

2.6 செவ்வியல் தமிழில் *பாடியான், பாடியாள், பாடியார்* முதலான வாய்பாட்டு வினைகளின் நிகழ்ச்சி காணப்படுகின்றது. இவை வினையாலணையும் பெயர்களாகவே நிகழ்கின்றன. இக்காலத் தமிழில் இவற்றின் நிகழ்ச்சி காணப்படவில்லை. இந்த வினைகள் திருக்குறளில் இடம் பெற்றுள்ளன. எ–டு. *இழுக்கியான்* (குறள்.535), *இயற்றியான்* (குறள்.1062), *அடங்கியான்* (குறள்.124), இவற்றிற்கு முறையே *மறந்திருந்தான், படைத்தவன், அடங்கினவன்* எனப் பரிமேலழகர் உரை வகுப்பார். இந்த உரையானது *வினையாலணையும்* பெயர்ப் பொருண்மையைக் குறிப்பதாக அமைந்துள்ளது. இந்த உரை மொழி மரபுக்கு இசைந்த ஒன்றாகும். பின்வரும் குறட்பாவினைக் கருத்தில் கொள்க:

5. ***இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென்***
***இல்லவள் மாணாக் கடை*** (53)

இந்தக் குறட்பாவில் *இல்லவள்* என்பதற்கு *இல்லாள்* என உரை காணப்படுகிறது. இது வாழ்க்கைத் துணைவியைக் குறிக்கும் ஒரு மரபுச் சொல்லாகும். *இல்லவள், இல்லாள்* ஆகியவற்றின் நேரிய சொற் பொருண்மை *இல்லில் உள்ளவள்* என்பதாகும். இவையே பின்னர் *இல்லவள், இல்லாள்* என்று மர்புச் சொற்களாகி *வாழ்க்கைத் துணைவி* என்னும் பொருண்மையை உணர்த்துகின்றன. *இல்லவள், இல்லாள்* ஆகிய சொற்களில் நிகழும் *–அவள், –ஆள்* ஆகிய விகுதிகள் இருப்புப் பொருண்மையை உணர்த்துவதாகும். இத்தகைய பொருண்மை விளக்கங்களைப் பொதுவாக உரைவிளக்கங்களில் காணமுடியாது.

## 3.0 நச்சினார்க்கினியரும் குறிப்புப் பெயரெச்சமும் :

3.1 பண்டைத் தமிழ் உரையாசிரியர்களுள் நச்சினார்க்கினியர் குறிப்பிடத்தக்கவராவார். இவர் தொல்காப்பியம் (எழுத்து, சொல், பொருள்– 5 இயல்கள்) பத்துப்பாட்டு, கலித்தொகை, குறுந்தொகையில் இருபது பாடல்கள், சீவகசிந்தாமணி ஆகியவற்றுக்கு உரை வகுத்துள்ளார். இவர் உரைத்திறன் பற்றி விரிவாகப் பேசுவதற்கு மிகுந்த வாய்ப்புள்ள தாயினும் கலித்தொகையில் ஆங்காங்கே காணப்படும் உரைச் சிறப்பினைப் பற்றி இங்குச் சுருக்கமாகக் குறிப்பிடப்படும்.

3.2 *அரும், கடும், கொடும், நறும், இரும்* 'கரிய, பெரிய' முதலான சொற்கள் குறிப்புப் பெயரெச்சங்களாகும். இந்தச் சொற்களில் நிகழும் உம்மென் கிளவி பெயரெச்ச விகுதியாகக் குறிப்பிடப்படும். ஆயினும் இதன் பொருண்மை தெளிவுபடுத்தப்படவில்லை. நச்சினார்க்கினியர் இந்த வகையில் நமக்குத் துணை புரிகிறார். கலித்தொகையில் நிகழும் சில உம்மீற்றுக் குறிப்புப் பெயரெச்சத் தொடர்களுக்கு நச்சினார்க்கினியர் பின்வருமாறு உரை வகுப்பார்.

6 (1) அருங்காதல் (2.9) = அரிதாகிய வேட்கை
(2) இருங்கூந்தல் (14.4) = கரிதாகிய மயிர்
(1) இருமுந்நீர் (5.6) = பெரிதாகிய கடல்
(1) நறுநுதல் (14.4) = நறியதாகிய நுதல்

மேலே குறிப்பிட்ட எடுத்துக்காட்டுக்களில் நறுநுதல் என்பதற்கு நறிதாகிய நுதல் என்று உரை வகுத்திருக்க வேண்டும். நறியது என்பது குறிப்பு வினையாலணையும் பெயராகும். பிற எடுத்துக்காட்டுக்களைக் கருதுகையில் குறிப்பு வினையாலணையும் பெயராகிய *நறியது* என்பதற்குப் பதிலாகக் குறிப்பு வினைமுற்றாகிய *நறிது* என்பதே இங்கே நிகழ்ந்திருக்க வேண்டும். இங்கே குறிப்பிடத்தக்க ஒரு செய்தி யாதெனில் *அரும், இரும், நறும்* ஆகிய குறிப்புப் பெயரெச்சங்களில் நிகழும் உம்மென் கிளவியின் பொருண்மை ஆகிய என்னும் குறிப்புப் பெயரெச்சத்துடன் பொருந்துவ தாகும். இதனின்றும் மேற்படி பெயரெச்சங்களில் நிகழும் உம்மென் கிளவியின் பொருண்மை *ஆகிய* என்பதாகும். இந்தப் பொருண்மை விளக்கம் *பெரிய, கரிய, அரிய, கொடிய* முதலான குறிப்புப் பெயரெச்சங்களில் நிகழும் *–இய* என்பதற்கும் பொருந்தும். இங்கே ஒரு சிக்கல் எழுகிறது. *அரிய* என்பது எடுத்துக்காட்டாக *அரிது, அரியது* ஆகியவற்றுள் எதனுடைய பெயரெச்சம் என்பதே அந்தச் சிக்கலாகும்.[2]

**3.3** முன்னதாக அரிய, பெரிய முதலான குறிப்புப் பெயரெச்சங்களுக்கு உரிய வினைமுற்றுக்கள் *அரிது, பெரிது* என்ற குறிப்பு வினைமுற்றுக்களா அல்லது *அரியது, பெரியது* என்ற குறிப்பு வினையாலணையும் பெயர்களா என்ற வினா எழுப்பப்பட்டது. இந்த வினா இளைய, பழைய ஆகிய குறிப்புப் பெயரெச்சங்களுக்கும் பொருந்தும். அதாவது, இவற்றின் வினைமுற்று வடிவம் *இளைது, பழைது* என்பனவா அல்லது *இளையது, பழையது* என்ற குறிப்பு வினையாலணையும் பெயர்களா என்ற வினா இங்கும் எழுகிறது. இங்கே குறிப்பிடத்தக்க ஒரு செய்தி யாதெனில் *அரிய, கரிய, இளைய, பழைய* ஆகிய பெயரெச்சங்களொடு *அரும், கரும், இளம், பழம்* ஆகிய குறிப்புப் பெயரெச்சங்களும் வழக்கில் உள்ளன. எ–டு *அரிய செயல்/அருஞ்செயல், கரிய புகை/கரும்புகை, இளைய கன்று/இளங்கன்று, பழைய பாடல்/பழம்பாடல்.* இந்த இணைகளுள் இளம், பழம் ஆகிய குறிப்புப் பெயரெச்சங்கள் **இளையும்,* **பழையும்* ஆகியவற்றினின்றும் ஒடுங்கிய வடிவங்களாகும். இந்தப் பின்னணியில் *அரிய, கரிய, இளைய, பழைய* ஆகியவற்றின் வினைமுற்றுக்களை *அரியது, கரியது, இளையது, பழையது* ஆகிய குறிப்பு வினையாலணையும் பெயர்களாகவும் அரும், கரும், இளம், பழம் ஆகியவற்றின் வினைமுற்றுக்களை *அரிது, கரிது, இளைது, பழைது* ஆகிய குறிப்பு வினைமுற்றுக்களாகவும் கருதலாம். ஆயினும் இங்கே மீண்டும் சிக்கல் எழுகிறது. தமிழில் ஆருயிர், கார்முகில் முதலான தொகைச் சொற்களின் நிகழ்ச்சி காணப்படுகின்றது. இவற்றில் நிகழும் *ஆர், கார்* ஆகியவையும் ஒரு வகையில் குறிப்புப் பெயரெச்சங்களாகக் கருதத் தக்கவையாகும். இந்தச் சிக்கலை எப்படி விடுவிப்பது? இந்த வகையில் நச்சினார்க்கினியர் உரை நமக்குப் போதிய விளக்கத்தைத் தருவதாகத் தோன்றவில்லை. இப்போதைக்கு *ஆர்/அரும், கார்/கரும்* ஆகியவற்றை ஒரு நிகரனவாகக்கொண்டு இவை குறிப்பு வினைமுற்றுக்களோடு தொடர்புடையனவென்றும் அரிய, கரிய, இளைய முதலியவை குறிப்பு வினையாலணையும் பெயர்களோடு தொடர்புடையன வென்றும் கருதலாம்.

## அடிக்குறிப்புகள்:

1. இங்கே குறிக்கப்பெற்றுள்ள ஒன்றன்பால் முற்று வினைகளில் நிகழும் *–த்து* என்ற விகுதியின் தோற்றத்தைச் செயுத்து வாய்பாட்டு இறவாக்காலப் பொதுவினைமுற்றுக்களில் நிகழும் *–உத்து* என்பதனுடன் தொடர்புபடுத்தலாம். செயுத்து வாய்பாட்டு வினைகள் செயுந்து (தொல்.சொல்.சேனா.292) வாய்பாட்டு வினைகளின் வலித்தல் விகாரமாகும். செயுத்து வாய்பாட்டு வினைகள் தமிழில் காணப்படவில்லையாயினும் கன்னடத்தில் நிகழ்கின்றன. எ–டு. கேளுத்தானெ 'கேட்கிறான்', ஆடுத்தானெ *'ஆடுகிறான்'*, செவ்வியல் இலக்கியங்களில் செயுத்து வாய்பாட்டு இறவாக்காலப் பொதுவினைகள் செய்த்து வாய்பாட்டினவாக ஒடுங்கி இறவாக்காலப் பகுதியாக (Non-past Tense Base) நிகழும் நிலை காணப்படுகிறது. எ–டு, இழத்தும் (குறள்.1250) 'இழப்போம்', *ஒளித்தி* (புறம் 8.8) 'ஒளிவாய்', *கடத்திர்* (கலி 7.3) 'செல்வீர்', *அளித்தல்* (சிறு.210) 'அளிப்பது' இந்த எடுத்துக்காட்டுக்களில் ஈற்றில் நிகழும் *–உம், –இ, –இர், –அல்* ஆகிய விகுதிகளைத் தவிர்த்துவிட்டால் எஞ்சி நிற்கும் வடிவங்களாகிய *இழத்த்–, ஒளித்–, கடத்–, அளித்–* ஆகியவை செய்த்து வாய்பாட்டு இறவாக்காலப் பகுதிகளாகும். ஒன்றன்பால் குறிப்பு வினைமுற்று விகுதியாகிய *–த்து* என்பது இந்த ஆய்வில் செய்த்து வாய்பாட்டு இறவாக்காலப் பகுதியில் நிகழும் *–த்து* என்பதனுடன் தொடர்புபடுத்தப்படுகின்றது. இது மேலாய்வுக்கு உரியதாகும்.

2.இங்கே சுட்டப்பெற்றுள்ள சிக்கலின் எல்லை மேலும் விரிவாகிறது. பழைய, இளைய, அன்றைய, நேற்றைய, இன்றைய, நாளைய, முந்தைய, பிந்தைய ஆகிய குறிப்புப் பெயரெச்சங்களில் நிகழும் *–ஐய* என்பது இருப்புப் பொருண்மையை உணர்த்தும் குறிப்புப் பெயரெச்சமாகும். மரபு வழிப் புலமையில் பழைய, இளைய, அன்றைய முதலானவை முழுதுமாகக் குறிப்புப் பெயரெச்சம் என்று கருதப்படுகிறது. ஆயினும் இவையனைத்தும் *பழையதாகிய, இளையதாகிய, அன்றிருந்த, நேற்றிருந்த, இன்றுள்ள* என்ற பொருண்மை விளக்கத்திற்கு உரியனவாகும். இவற்றில் நிகழும் ஆகிய, இருந்த, உள்ள ஆகியவையனைத்தும் இருப்புப் பொருண்மையை உணர்த்தும் குறிப்புப் பெயரெச்சங்களாகும். இந்த வடிவங்களும் *பழைய, இளைய, அன்றைய* முதலானவற்றில் நிகழும் *–ஐய* என்ற வடிவமும் துணைநிலை வழக்கில் (Complementary Distribution) நிகழ்கின்றன. இதனைக் கருத்தில்கொண்டு *–ஐய* என்பதில் நிகழும் ஐ (=அய்) என்பது வழக்கற்றுப்போன ஒரு தொன்மையான இருப்புப் பொருண்மையை உணர்த்தும் உள்வினை (Copula) என்பதை அறியலாம். இந்த உள்வினை அரிய, கரிய முதலான குறிப்புப் பெயரெச்சங்களில் –இ (<இய்) எனத் திரிகின்றது.

**சுருக்க விளக்கம் :**

| | | |
|---|---|---|
| இளம் | – | இளம்பூரணம் |
| எழுத்து | – | எழுத்ததிகாரம் |
| கலி | – | கலித்தொகை |
| குறள் | – | திருக்குறள் |
| குறு | – | குறுந்தொகை |
| சிலம்பு | – | சிலப்பதிகாரம் |
| சிறு | – | சிறுபாணாற்றுப்படை |
| சொல் | – | சொல்லதிகாரம் |
| நாலடி | – | நாலடியார் |
| புறம் | – | புறநானூறு |
| பொருள் | – | பொருளதிகாரம் |

# இளையான்குடி மாறநாயனாரின் விருந்தோம்பல் பண்பு

**சி.ஞானமணி** எம்.ஏ.,பி.எட்.,
*பட்டதாரி தமிழாசிரியர், அரசு மேல்நிலைப்பள்ளி,*
ஆலவயல், சடையம்பட்டி,
பொன்னமராவதி, புதுக்கோட்டை –622 401.
கைபேசி : 99424 26869

பெரியபுராணம் என அழைக்கப்படும் *'திருத்தொண்டர் புராணம்'* மனித சமுதாயத்தின் வாழ்வியல் களஞ்சியம் ஆகும். பெரியபுராணத்தில் சைவசமயக் கருத்து ஒருபுறமெனில் அதன் மறுபுறம் மனிதர்கள், மற்றுயிர்கள் என அனைத்துயிர்களிடமும் அன்பு செலுத்தி, தொண்டுகள் செய்து வாழ்ந்த நாயன்மார்களின் உயிர்நேயம் ஆகும்.

தூய அன்போடு வாழ்ந்த அடியார்களின் வாழ்வினை வரலாற்றுச் சான்றுகளோடு படம் பிடித்துக் காட்டிச் செல்வதில் பெரியபுராணத்திற்கு நிகர் பெரியபுராணம் மட்டுமே ஆகும். சங்க இலக்கியங்கள் கூட அன்பை விளக்கிச் சொல்வதில் பெரியபுராணத்திற்கு ஒப்புமையாகாது என்கிறார் திரு.வி.க. இதனை,

"தோலா நாவினராய மேலோர் மொழிந்த சங்க நூற்களே இந்நூலுக்கு அன்புத் துறையில் ஒப்புமை பெறுமாறெங்ஙனம்? அன்புத் துறையில் இவ்வருணூற்கு ஒப்பாகவும் உயர்வாகவும் வேறு நூற்களை விளம்புவோர் மானுடராவரோ? அவர் அன்பினீர்மையும், அருளினீர்மையும் அறிந்தாராவரோ?" என வரும் திரு.வி.க.வின் கூற்று இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்.

பெரியபுராணத்தில் சேக்கிழார் குறிப்பிடும் அடியார்கள் இறைவன். சிவனடியார்கள், மக்கள் மற்றும் பிற உயிர்கள் என அனைவர் மாட்டும் தொண்டு செய்து, துன்பம் நீக்கி உண்மையான அன்பினை உலகறியச் செய்தவர்கள் ஆவர்.

நாயன்மார்கள் பிறர்காகத் தம் உடல், பொருள், ஆவி என அனைத்தையும் கொடுத்தவர்கள். "அடியார்களுக்குச் செய்யும் தொண்டே ஆண்டவனுக்குச் செய்யும் தொண்டு" என்றும், "மக்களுக்குச் செய்யும் தொண்டே மகேசனுக்குச் செய்யும் தொண்டு" எனும்படி வாழ்ந்து காட்டியவர்கள். பிறரின் பசிப்பிணியை விருந்தோம்பல் எனும் அன்பால் அறவே அகற்றியவர்கள் ஆவர்.

சிறுத்தொண்டர், தன் மகனையே கறியாகச் சமைத்துக் கொடுத்தும், திருநாவுக்கரசர் மகன் இறந்துவிட்ட நிலையில் இறந்துவிட்ட மகனின் உடலைப் பாயில் சுருட்டி மறைத்துவிட்டும் விருந்தோம்பல் செய்துள்ளனர். அடியார்கள் தாங்கள் பசியொடு இருக்கும் நிலையிலும் பிறர், தங்களின் இல்லம் தேடி பசியுடன் வந்தால் தம் பசி பொறுத்துப் பிறர்பசி நீக்கும் விருந்தோம்புதலின் வீரம் மிக்கவர்கள். தங்களிடம் இருப்பது காயானாலும், கனியானாலும் தாங்கள் மட்டும் தனியாக உண்ணாது ஒழிவு, மறைவு இல்லாது கனிவுடன் விருந்தோம்பல் செய்பவர்கள் சேக்கிழார் சுட்டும் அடியார்கள். அவ்வகையில் இளையான்குடி மாறநாயனாரின் விருந்தோம்பல் பண்பினை இக்கட்டுரை விளக்குகிறது.

## விருந்தோம்பல் :

*'விருந்து'* எனும் சொல்லிற்குப் *'புதியது'* என்றும் *'விருந்தோம்பல்'* எனும் சொல்லிற்குப் *'புதிதாய் வருபவரை உண்டி முதலியவற்றால் உபசரித்தல்'* என்றும் பொருள் தருகிறது கழகத் தமிழகராதி. ஆகையால் தம் இல்லத்திற்குப் புதிதாய் வருபவர்க்கு உண்டி முதலியவற்றால் உபசரிப்பதே விருந்தோம்பல் ஆகும். நண்பர்கள், உறவினர்கள் விருந்தினர் ஆகமாட்டார்கள் என்பது இதன்கண் புலனாகிறது. தம் இல்லத்திற்கு வரும் முன்பின் அறிமுகமாகாத புதியவரை முகமலர்ச்சியோடு வரவேற்று உபசரிப்பதே விருந்தோம்பல் பண்பாகும்.

"விருந்து என்றாலே புதிது எனப் பொருள்படும். வீட்டிற்கு வரும் புதியவர்களை விருந்தினர் என்பது வழக்கம். உறவு முறையினரை, நண்பர்களை விருந்தினரென்பது பொருந்தாது. அறிமுகமற்ற புதியவர்களை வரவேற்று உபசரிக்கும் பண்பு அன்று மிகுதியும் இருந்தது. இதையே விருந்தோம்பல் என்றனர்" என்றும்,

"விருந்து என்றால் புதுமை, புதியவர் என்று பொருள். *'விருந்தே புதுமை'* என்பர் தொல்காப்பியர். இன்று உற்றார், உறவினர், நண்பர்களையும் விருந்து என்கிறோம். ஆயின், பண்டைக் காலத்தில் முன் அறியாதவர்களாய் வீடு தேடி வருவோரே விருந்தினர் எனப் பெற்றனர்" என்னும் கூற்றும் இங்குச் சுட்டத் தக்கதாகும்.

விருந்தோம்பல் பண்பு தமிழர்கள் போற்றிய நற்பண்புகளில் முதன்மையானதாகும் தமிழர்களின் தன்னிகரற்ற அடையாளமாக விளங்குவதும் விருந்தோம்பல் பண்பேயாகும்.

கணவனும் மனைவியும் தம்மையும், தம் மக்களையும் பேணிக் காத்து வாழ்வதெல்லாம் விருந்தினரைப் பேணி அவருக்குப் பலவகையிலும் உதவி செய்வதற்கே என்று வள்ளுவர் விருந்தோம்பலின் சிறப்பைக் கூறுகிறார்.

***"இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி***
***வேளாண்மை செய்தற் பொருட்டு"***

என வரும் குறட்பா இங்குச் சுட்டத்தக்கதாகும். இவ்வாறான சிறப்புக்குரிய விருந்தோம்பல் பண்பினை இளையான்குடி மாறநாயனாரின் வாழ்வின் வழி அறியலாம்.

## இளையான்குடி மாறநாயனாரின் விருந்தோம்பல் :

இறையான்குடி எனும் ஊரில் வேளாளர் மரபில் தோன்றியவர் மாறனார். வேளாண்மைத் தொழில் செய்பவர் சிவபெருமானிடத்தில் மிகவும் பக்தி கொண்டவர்

தன் இல்லத்திற்கு வரும் சிவனடியார்களை இன்முகத்துடன் வரவேற்று இனிய மொழிகள் பேசி, அவர்களின் திருவடிகளைத் தூய்மை செய்து வணங்கி வழிபட்டு அறுசுவை அமுதளிக்கும் விருந்தோம்பல் பண்பின் வித்தகர் ஆவார். அடியார்களுக்கு அமுதளிக்கும் இத்தொண்டைச் செல்வ வளம் மிகுந்திருந்த காலம் மட்டுமல்லாது தான் வறுமையுற்ற போதும் தன்னிடம் உள்ளவற்றை விற்றும், கடன் வாங்கியும் தொடர்ந்து அடியார்களுக்கான விருந்தோம்பல் தொண்டை விடாது செய்தார் இதனை,

*"இன்ன வாறு வளஞ்சு ருங்கவும் எம்பிரான் இளையான்குடி*
*மன்னன் மாறன் மனஞ்சு ருங்குதல் இன்றி உள்ளன மாறியும்*
*தன்னை மாறி இறுக்க உள்ள கடன்கள் தக்கன கொண்டு பின்*
*முன்னை மாறில் திருப்ப ணிக்கண் முதிர்ந்த கொள்கை யராயினார்"*

என வரும் சேக்கிழாரின் பாடல் குறித்துச் செல்வது இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்

இளையான்குடி மாறநாயனார் எச்சூழலிலும் தனது விருந்தோம்பல் தொண்டை விடாது செய்யும் வீரம் மிக்கவர் என்பதனை உலகிற்கு உணர்த்த விரும்பிய சிவபெருமான் துறவுக்கோலம் கொண்டு மாறனாரும் அவரது மனைவியாரும் பசியுடன் இருக்கும் ஓர் இரவில் மழையில் நனைந்தவாறு மாறனாரின் இல்லத்திற்கு வந்தார். வந்த அடியவரை வரவேற்ற மாறனார் மழையில் நனைந்து ஈரமேனியுடன் இருக்கும் அடியாரின் ஈரமேனியைத் துடைத்துவிட்டார். பின் தன் மனைவியிடம் இவ்வடியார் பசித்து வந்துள்ளார். இதற்கு என்ன செய்வது என்று வினவினார். இதனை,

*"ஈர மேனியை நீக்கி இடங்கொடுத்*
*தார இன்னமு தூட்டுதற் காசையால்*
*தார மாதரை நோக்கித் தபோதனர்*
*தீர வேபசித் தார்செய்வ தென்என்று"*

எனவரும் சேக்கிழாரின் பாடல் இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்

மாறனாரும் அவரது மனைவியாரும் பசியுடன் இருந்தபோது வந்த அடியவரின் பசியை நீக்கவே மாறனார் தன் மனைவியிடம் வினவுகிறார். மனைவியும் விருந்தோம்பலில் சிறந்தவர். இரவில் விருந்தினர் வரின் விருந்து செய்யும் மேன்மை மிக்கவர்.

*"அல்லில் ஆயினும் விருந்துவரின் உவக்கும்*
*முல்லை சான்ற கற்பின் மெல்லியல் குறுமகள்"*

என வரும் நற்றிணை கூறும் கற்பிலும், விருந்தோம்பல் பண்பிலும் சிறந்தவர். மாறனார் வினவியதும் இல்லத்தில் எதுவும் இல்லை. அக்கம் பக்கத்திலும் கடன் தருவார் இனி இல்லை. ஆகையால், பகலில் விதைத்த விதை நெல்லைக் கொண்டு வந்தால் அமுதாக்கலாம் எனக் கூறினார். மாறனாரும் அவ்வாறே சென்று விதை நெல்லை அள்ளிக் கொண்டு வந்து மனைவியிடம் கொடுத்தார். மனைவி அமுதாக்க விறகு இல்லை என்றதும் தன் இல்லத்தின் கூரையை விறகிற்காக அறுத்துக் கொடுத்தார். கறிகளுக்கு என்ன செய்வோம்? என மனைவி சொன்னதும் தன் இல்லத்துக் கொல்லைக்குச் சென்று கீரை கொண்டு வந்தார். இதனை,

*"வெந்தழல் அடுப்பின் மூட்ட விறகில்லை என்ன மேலோர்*
*அந்தமில் மனையில் நீடும் அலக்கினை அறுத்து வீழ்த்தார்"*

என்றும்,

*"வழிவரும் இளைப்பி னோடும் வருந்திய பசியினாலே*
*அழிவுறும் ஐயன் என்னும் அன்பினிற் பொலிந்து சென்று*
*குழிநிரம் பாத புன்செய்க் குறும்பயிர் தடவிப் பாசப்*
*பழிமுதல் பறிப்பார் போலப் பறித்தவை கறிக்கு நல்க"*

என்றும் வரும் சேக்கிழாரின் பாடல் வரிகள் இங்குக் குறிப்பிடத்தக்கனவாகும்.

மாறனாரின் மனைவி சமைத்து முடித்தபின் தன் கணவரான மாறனாரிடம் வந்திருக்கும் அடியவரை இப்போதே விரைவாக உணவு உண்ணச் செய்தல் வேண்டும் என்றார். மாறனாரும் துயில் கொண்டிருக்கும் அடியாரிடம் சென்று விரைவில் எழுந்து உணவு உண்டருளுக என்ற போது அடியவர் வேடத்தில் வந்திருந்த சிவபெருமான் ஜோதி வடிவாய்த் தோன்றி உமையம்மையுடன் காளை வாகனத்தில் இருவர்க்கும் காட்சி தந்தார். இதனை,

*"மாலயற் கரிய நாதன் வடிவொரு சோதி யாகச்*
*சாலவே மயங்கு வார்க்குச் சங்கரன் தான்ம கிழ்ந்தே*
*ஏலவார் குழலாள் தன்னோ டிடபவா கனனாய்த் தோன்றிச்"*

எனவரும் சேக்கிழாரின் பாடல்வழி அறிய முடிகிறது.

இளையான்குடிமாறனார் விருந்தோம்பல் செய்வதில் தன்னிகரற்றவர் என்பது பிறர் பசி நீக்க அவர்படும் பல இன்னல்கள் மூலம் தெளிவாகிறது. தான் செல்வ வளமோடு இருந்த போதும், வறுமையால் தன்னையே விற்றுக் கடன் அடைக்கும் நிலையிலும் விருந்தோம்பல் செய்கிறார். மழைபொழியும் இரவில் மாறனார்; மனைவியொடு பசியுடன் இருந்த நிலையில் தன் இல்லம் வந்த அடியாரின் பசிநீக்கத் தங்களின் பசியைப் பொருட்படுத்தாது வயலில் விதைத்த விதைநெல்லைக் கொண்டு வந்து அமுதாக்கி உணவிடும் செயல்மூலம் மாறனார் எந்த நிலையிலும் எப்படிப்பட்ட துயரம் வரினும் விருந்தோம்பல் செய்யும் தன் கொள்கையில் மாறாத உறுதிப்பாடுடையவர் என்பதை அறிய முடிகிறது. இதனை,

"சோறிடும் தொண்டு தலைநின்றவர் இளையான்குடி மாறர் என்பவர்"

என வரும் கூற்று மெய்ப்பிப்பது இங்குச் சுட்டத்தக்கதாகும். மாறனார் தான் எந்நிலையில் இருந்தாலும் விருந்தோம்பல் எனும் கொள்கையை எப்பாடுபட்டாவது செய்து முடிக்கும் மேன்மை பெற்றவர் என்பதை அறிய முடிகிறது.

மாறனார் அடியார்களை வணங்கி வழிபடுவர். அடியார்களின் துயர் நீக்குபவர். பிறரின் பசித்துன்பம் நீக்குபவர். தான் எந்த நிலையில் இருப்பினும் விருந்தோம்புதல் எனும் தனது கொள்கையில் அணுவளவும் வழுவாமல் வாழ்ந்துள்ளார். விருந்தோம்பலின் வரைவிலக்கணமாகத் திகழ்கிறார் என்பதை இக்கட்டுரை உணர்த்துகிறது.

# குறவஞ்சியின் இலக்கியக் கட்டமைப்பு

டாக்டர். **மா.இராமலிங்கம்**

**(1987ம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் செந்தமிழ் இதழில் வெளிவந்தது)**

*சாகித்ய அகாடமியின் சார்பில் மதுரைப் பல்கலைக் கழகத்தில் 1987–ஜூலை 25–ஆம் நாள் நடைபெற்ற குறவஞ்சி இலக்கியக் கருத்தரங்கில் படிக்கப் பெற்ற கட்டுரை.*

தமிழ் இலக்கியம் காலந்தோறும் புதிய புதிய இலக்கிய வடிவங்களைப் பெற்று வளர்ந்து வந்திருக்கிறது குறவஞ்சி என்பது பதினெட்டாம் நூற்றாண்டில் தோன்றி மலர்ந்த ஒரு புத்திலக்கியம். குறவஞ்சி நூல்களுள் முதற்கண் வைத்து எண்ணப்படத்தக்கது திரிகூட ராசப்பக் கவிராயரின் திருக்குற்றாலக் குறவஞ்சியே ஆகும். அதன் கட்டமைப்பு இத்தன்மையது என்று காட்ட முயல்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

கட்டமைப்பு, வடிவம், உருவம், புறச்சட்டகம் என்பன திறனாய்வுத் துறையில் ஒரே பொருண்மை கொண்ட சொற்கள். பழைய உரையாசிரியர் களின் நடையிற் கூறினால் கட்டமைப்பெனினும் வடிவமெனினும் உருவமெனினும் புறச்சட்டகமெனினும் ஒக்கும். ஓர் இலக்கியப் படைப்பில் காணப்படும் பல்வேறு கூறுகளின் ஒருங்கிணைப்பே கட்டமைப்பு எனப்படும்.

ஒரு முழுமையின் பகுதிகளுக்கிடையே நிலவும் உறவுகளின் கோப்பு நிலையையே உருவம் என்று குறிப்பிடுகிறோம் இதுவே படைப்புக்கு அழகு தருவது. வனப்பு என்னும் சொல்லுக்கு விளக்கம் தர வந்த பேராசிரியர், *"பெரும் பான்மையும் பல உறுப்புத் திரண்டவழிப் பெறுவதோர் அழகு"* என்று எழுதிச் செல்வது ஈண்டு நினைவு கூரத்தக்கது. எனவே கட்டமைப்பு என்பதை நாம் பழைய உரையாசிரியர் வழி நின்று *'உறுப்புக்களின் திரள் நிலை'* என்று விளக்கலாம்.

கட்டமைப்பு அல்லது வடிவம் என்பது தாமே தனிநிலையில் விளைவதன்று. அது படைப்பின் நுவல்பொருளை ஒட்டியது. வேறு வார்த்தைகளில் கூறினால் படைப்பின் உள்ளடக்கமே அதன் வடிவத்தை நிர்ணயிக்கிறது ஏதோ ஒரு வகையில் முன்னரே அமைந்துவிட்ட வடிவங்கள் புதிய வடிவங்களுக்குத் தடையாக இருக்குமென்றும், புதிய உள்ளடக்கங்கள் பழைய வடிவங்களின் கட்டுமானங்களை உடைத்தெறிந்து விட்டுப் புதியனவற்றைப் படைக்கின்றன என்றும் உருசிய நாட்டுக் கலை இலக்கிய நுண்ணார்வலர் எர்னஸ்ட் பிஷர் கூறுகிறார் [1] எனவே குறவஞ்சியின் கட்டமைப்பை ஆராய்கிற போது அதன் உள்ளடக்கத்தை விவாதிக்காமல் இருத்தல் இயலாது.

## II

குறவஞ்சி ஒரு நாடக இலக்கியம் சிறந்தனவற்றையெல்லாம் தமிழ் என்று சுட்டி மகிழ்வது நம் மரபலலவா? திரிகூட ராசப்பர் அம் மரபை ஒட்டியே, *'குறவஞ்சித் தமிழ்'* என்று கூறி மகிழ்கிறார். *'செழித்த குறவஞ்சி நாடகம்'* என்றும், *'பல வளம் சேர் குறவஞ்சி நாடகம்'* என்றும் அவர் இதன் சிறப்பைப் பேசுவார்.

1 The necessity of Art A Marxist Approach, p 125

திருக்குற்றாலக் குறவஞ்சியில் இடம் பெறும் ஒவ்வொரு கதை நிகழ்வுகளையும் ஒரு கருத்தலகாகக் கொண்டு (Thematic Unit) தொகுத்து நோக்கினால் அந்நாடகம் சற்றேறக்குறைய அறுபது கருத்தலகுகளில் முடிவதைக் காணலாம். குற்றாலநாதரின் பவனி, அவரைக் கண்டு வசந்தவல்லி மையல் கொள்ளுதல், ஆற்றாளாய் வருந்தும் அவளைக் குறத்தி ஒருத்தி குறி சொல்லித் தேற்றுதல் என்னும் கதையின் முக்கிய நிகழ்ச்சிகள் நாற்பத்தைந்தாவது அலகோடு நறுக்கென முடிந்துவிடுகிறது. எஞ்சியுள்ள அலகுகள் நாடகத்திற்கு இன்றியமையாதன என்று கூறுவதற்கில்லை. குறவன்–குறத்தி தொடர்பான நிகழ்வுகள் மற்றொன்று விரித்தல் போல் நீண்டு போகின்றன. பழைய வீட்டை மாற்றியமைக்க எண்ணிய ஒருவர் பின்பகுதியை மட்டும் விரிவுபடுத்தி அதனோடு இணைத்தாற்போல் ஏதோ ஒரு செயற்கைத் தன்மை தனித்தனியானவற்றை ஒட்ட வைத்தது போன்ற இடைமுறிவுநிலை, குறவஞ்சியில் புலனாகிறது. இந்த இடைமுறிவு புறத்தே புலனாகாத அளவுக்கு இரண்டையும் குறத்தி இணைத்து விடுகிறாள். நாடகத்தின் முன்னோக்கிய இயக்கத்திற்கு மையவிசைமுனை அவளே. எனவேதான் போலும் நாடகம் அவள் பெயரால் அமைகிறது! நாடகம் பயில்வோரின் கவனம் அனைத்தையும் முழுமையாக ஈர்க்கும் மையப் பாத்திரம் போல் வசந்தவல்லியை ஆசிரியர் படைத்தாலும் மெல்ல மெல்லப் படிப்போரின் கவனத்தைத் திசை மாற்றிக் குறவஞ்சிபால் ஆசிரியர் கொண்டு செல்கிறார். தம் காலத்து வழங்கிய *'குறம்'*, *'குளுவ நாடகம்'* என்னும் இருவேறு இலக்கிய வடிவங்களை ஒட்ட வைத்துக் காண வேண்டும் என்னும் அவாவே திரிகூட ராசப்பரை இந்நாடகத்தை எழுதுமாறு தூண்டியிருக்கிறது. வடிவத்தில் சோதனை புரிந்து புதியதைப் படைக்க முனைந்த அவர், தம் முயற்சியில் வெற்றி பெற்றுள்ளார் என்பது ஒரு தலை. வேறுபட்டவற்றை இணைப்பதன் மூலம் ஒரு கலவைநிலை இலக்கியத்தை உருவாக்க அவர் முயன்றிருக்கிறார். (வேறு பொருத்தமான தொடர் கிட்டாமையால் *'கலவை நிலை'* என்பதையே இக்கட்டுரை முழுவதும் சுட்ட விழைகிறேன்.)

குறவஞ்சியை அழகுற அமைந்த ஓர் ஓரங்க நாடகம் எனலாம். நாடகம் என்று கூறுகிறபோது கதை மாந்தர்களை உரையாடும்படி விட்டுவிட்டு ஆசிரியன் மறைந்து நிற்பது போன்ற நாடகமன்று. அவனும் தன் இருப்பு நிலையைப் படிப்போர்க்கு உணர்த்துவதுபோல் இடையிடையே பேசுகிற நாடகம் இது. நவீன நாடகங்களில் இருப்பது போன்ற காட்சிப் பிரிவுகள், மேடையமைப்புக் குறிப்புகள் இதில் இல்லை. எனினும் இதனைக் காட்சிகளாகப் பிரித்துக் காட்டலாம். நாடகத்தின் சந்திகளான முகம், பிரதிமுகம், கருப்பம், விளைவு, துய்த்தல் ஆகியன இதிலும் இடம் பெற்றிருப்பதை விளக்கலாம். மேற்கண்ட ஐந்து சந்திகளும் போராட்டத்தைச் சித்திரிக்கும் ஐந்து படிநிலை என்பது நாம் அனைவரும் அறிந்ததே. குற்றாலநாதரின் பவனியை முகமாகவும், வசந்தவல்லி உலாக் காண்பதைப் பிரதி முகமாகவும், அவளது காமம் மிக்க கழிபடர் கிளவிகளைக் கருப்பமாகவும், குறத்தியின் வருகையை விளைவாகவும், அவள் குறி கேட்டு அமைதி பெறுவதைத் துய்த்தலாகவும் நாம் எண்ணிப் பார்க்கலாம். அதே போல் குறவன்–குறத்தி தொடர்பான நிகழ்வுகளிலும் போராட்டச் சித்திரிப்பை உணரலாம். சிங்கனின் வருகையே முகம்; குளுவனைச் சந்தித்தல் பிரதிமுகம்; சிங்கியைக் காணாது வருந்துதல் கருப்பம்; அவளைக் கண்டு மகிழ்தல்

விளைவு; அனைவரும் குற்றாலநாதரைப் போற்றல், துய்த்தல். துண்டு துண்டான இரு நாடகங்களைப் பொருத்துவாய் தெரியாமல் இணைத்துக் காட்டியிருப்பதில்தான் ஆசிரியரின் வெற்றி அடங்கி இருக்கிறது. பின்வரும் வரைகோட்டுப் படம் அதன் கட்டமைப்பை ஓரளவுக்குப் பகுநிலையில் புலப்படுத்தும் என்று நம்புகிறேன்.

<u>வசந்தவல்லியின் மனப்போராட்டம், குறவனின் மனப்போராட்டம், குறத்தியின் பங்கு</u>

திரிகூட ராசப்பர் காலத்தில் ஓரங்கமாக அமையும் இசைநாடகம் முற்றிலும் புதுமையானதே என்பதில் ஐயம் இல்லை. புதியன புனைவதில் திறன் காட்டிய ஆசிரியர் பழமையை அதனோடு கலப்பதிலும் வெற்றி பெற்றிருக்கிறார். புதுமை பழமை ஆகிய இரண்டின் கலவை நிலை இந்நாடகத்தைக் கூர்ந்து நோக்குவார்க்கு புலனாகாமற் போகாது.

உயிர்களின் வாழ்வில் தோற்றமும் மலர்ச்சியும் ஒடுக்கமும் இருப்பது போலவே இலக்கியத்தின் வாழ்நிலையிலும் இவை உண்டு. வாழ்வதற்காகப் போராடுவதும் வல்லமை வெற்றி பெறுவதும் உலக வாழ்வில் நிகழ்வது போலவே இலக்கிய உலகிலும் நிகழ்கின்றன. இலக்கிய வடிவங்கள் தத்தம் நிலைபேற்றுக்காக நடத்தும் போராட்டத்தைப் பின்னின்று நடத்துபவன் புலவனே. அவனே வாழ்விழந்து நிற்கும் சிலவற்றிற்கு வாழ்வு தருகிறான்; சிலவற்றை வேண்டா என ஒதுக்குகிறான்; சிலவற்றைச் செப்பம் செய்து புதுக்குகிறான். திரிகூட ராசப்பர் *'தசாங்கம்'*, *'கேசாதிபாதம்'* போன்ற நிலைப்பாடிழந்த இலக்கிய வடிவங்களுக்கும் மறுவாழ்வு தருகிறார்; உலா போன்ற இலக்கிய வடிவங்களில் வேண்டாதன நீக்கி மெருகூட்டிப் புதுக்குகிறார். உலா என்னும் இலக்கிய வடிவம் பல கூறுகளைக் கொண்டது. சிற்றில் இழைத்தல், பாவையாடல், கழங்காடல், ஊசல் எல்லாம் அதில் வரவேண்டும் என்பது பாட்டியல் விதி. இவற்றையெல்லாம் விலக்கித் தலைவன் பவனி வருதல், தலைவி அவனைக் கண்டு காமுறுதல் ஆகிய இரண்டை மட்டுமே அவர் ஏற்கிறார். பண்டை இலக்கியத் துறைகள் சிலவும், இடைக்காலப் பிரபந்த வடிவங்கள் சிலவும் திரிகூட ராசப்பரின் படைப்பில் கரந்துறை கோலத்தில் அமர்ந்து கொண்டு வாழ்வு பெற்றுவிடுகின்றன. பழமையின் உரத்தையும், புதுமையின் நலத்தையும் கலவை நிலையில் கூட்டிப் படைக்கப் பெற்றதே குறவஞ்சி என்பது வெளிப்படை.

III

குறவஞ்சி, நாட்டியத்தை முதன்மைப்படுத்திப் படைக்கப்பட்ட கலை–இலக்கிய வடிவம். கலைகள், செவ்வியற் கலைகள் (Classical Art) என்றும், நாட்டுப்புறக் கலைகள் (Folk-Art) என்றும் இருவகைப்படும். நாட்டுப்புறக் கலை, உழைக்கும் மக்களின் உணர்ச்சி வெளிப்படையாக மலர்வது; செய்யும் தொழிலோடு இணைந்து இயங்குவது; அவை மலரும் இடத்தை ஒட்டி அந்தந்த வட்டாரத்தின் தன்மை கொண்டது. செவ்வியற் கலையோ இதற்கு நேர்மாறானது. உழைப்பிலிருந்து தம்மை அந்நியப்படுத்திக் கொண்டோரே இதில் ஈடுபட்டனர். செய்தொழிற் சார்பு இன்றி வெறுமனே அமையும் முருகியல் உணர்வே அதன் மலர்ச்சிக்கு உந்துசக்தி ஆயிற்று; வட்டாரத் தன்மைக்கு அப்பாற்பட்ட, அனைவர்க்குமான பொது நிலையில் அவை

விளங்கின. இருவேறுபட்ட இக்கலைகளைக் கலவை நிலையில் காட்டுவதும் ராசப்பக் கவிராயரின் நோக்கமாக இருந்திருக்க வேண்டும். வசந்தவல்லி செவ்வியற் கலைத் துறைக்கு உரியவள்; குறவனும் குறத்தியும் நாட்டுப்புறக் கலைஞர்கள். வசந்த வல்லியின் வருகையைப் பாடுவதைவிடக் குறத்தியின் வருகையைப் பாடுவதற்கே கவிஞர் வாயூறி நிற்கிறார். இலக்கியத்தில் சமுதாயத்தின் மேல்நிலை மக்களே தலைமை இடம் பெற்றிருந்த நிலையை மாற்றி, அடித்தள மக்கட்கும் முதன்மை தர விழையும் ஆசிரியரின் ஜனநாயக மனோபாவம் குறவஞ்சியில் நன்கு எதிரொலிக்கிறது. *"பெயரளவில் தாழ்ந்த மரபினர் என்று கருதப்படும் குறவர் வாழ்வைச் சித்திரிப்பதே இதன் நோக்கம்"* என்றும், *"தெய்வங்களையும் குறுநில மன்னர்களையும் பாடி வந்த நமக்கு இது புதுமையல்லவா?"* என்றும் அறிஞர் வையாபுரியார் இதனை வியந்து பேசுவார்.[2]

திருக்குற்றாலக் குறவஞ்சி ஒரு பக்தி இலக்கியம் என்பதில் ஐயமில்லை. பக்தி இலக்கியங்களெல்லாம் இறையனுபவத்தை வெளிப்படுத்துவன. திரிகூட ராசப்பர்,

> ***"கிளைகளாய்க் கிளைத்தபல கொப்பெலாம்***
> ***சதுர்வேதம் கிளைகள் ஈன்ற***
> ***களையெலாம் சிவலிங்கம் கனியெலாம்***
> ***சிவலிங்கம் கனிகள் ஈன்ற***
> ***சுளையெலாம் சிவலிங்கம் வித்தெலாம்***
> ***சிவலிங்கம் சொரூபம் ஆக***
> ***விளையுமொரு குறும்பலவின் முளைத்தெழுந்த***
> ***சிவக்கொழுந்தை வேண்டு வோமே."***

என்று பாடும்போது அவர்தம் இறையனுபவத்தைக் கண்டு நாம் மெய்சிலிர்க்கிறோம். இறையனுவத்துக்குத் தடையாக நிற்பன உலக இன்பங்களே. சிற்றின்பங்களைத் துறந்து இறையின்பத்தைப் பெற வேண்டுமென்றே பக்திப் பனுவல்கள் வற்புறுத்துகின்றன. திரிகூடராசப்பர் ஒன்றை மறுத்து ஒன்றைப் பெற விழைபவரல்லர். ஒன்றிற்கொன்று உறுதுணையாக அமைய இரண்டையும் ஆரத்துய்க்கும் இன்ப அனுபவமே வாழ்வின் பயன் என்று கருதுபவர் அவர். இடையறாத இறைநாட்டம் உலக இன்பங்களை ஒரு கட்டுக்குள் நிறுத்தி மனிதனைத் தூய தொண்டு வாழ்வில் கொண்டு செலுத்தும் உடல் இன்பத்தை ஆரத் துய்ப்பது, மனித மனத்தைப் பக்குவப்படுத்தி இறை நிலைக்கு ஈர்த்துச் செல்லும். ஆசிரியர் இக் கருத்துடையராய் இருந்தமையாற்றான் தம் நூலின் முற்பகுதியில் தெய்வக் காதலையும், பிற்பகுதியில் மானுடக் காதலையும் பாடுகிறார். மானுடக் காதலைப் பாடும்போது, சற்றே எல்லை கடந்து சிருங்காரச் சுவையையும் வருணித்துப் பாடுகிறார் இருவேறு தன்மைகளின் கலவை நிலையாகக் குறவஞ்சி விளங்குகிறது என்பது இதனாலும் பெறப்படும்.

பக்தியை மையமாக்கி அடித்தள மக்களைத் தலைமை மாந்தராகக் கொண்டு இசைநாடகம் படைக்க முயன்ற திரிகூட ராசப்பர் இசையிலும் கலவை நிலையைக் காட்டுகிறார். ஏட்டிலக்கியத்தோடு நாட்டுப்புற இலக்கியம் அர்த்த நாரீஸ்வரக் கோலத்தில் கலந்து நிற்கும் நிலை எல்லாக்

2. இலக்கிய விளக்கம். ப.115

குறவஞ்சியிலும் உண்டு. இனிய இயற்றமிழ்ப் பாக்களோடு கீர்த்தனை, வண்ணம், கண்ணி, சிந்து போன்ற இசைப்பாக்களும் சங்கமித்துப் புறப்புனலாய்ப் பொங்கி வழிகின்றன. கர்நாடக இசையும் நாட்டுப்புறப் பாடலிசையும் கைகோத்து நின்று களிநடம் புரிகின்றன.

செவ்வியல் இலக்கியம், செவ்விய மதுரம் சேர்ந்த சீரிய கூரிய தீஞ்சொற்களாய் இயன்றது. கற்றுத் துறைபோய வித்தகப் புலவருக்குக் கற்குந்தோறும் இன்பம் பயப்பது. நாட்டுப்புற இலக்கியமோ நேர்மாறானது. பேச்சு மொழியே இதன் மூச்சு நிலையாகும். வழக்குச் சொற்களும் கொச்சைப் பிரயோகங்களும் பழமொழிகளும் இதன்கண் இடைமிடைந்து வரும். குறவஞ்சி இலக்கியம் மொழியமைப்பிலும் இருவார்ப்பு நிலை கொண்டது.

உலக நாடகப் பின்னணியில் நாம் குறவஞ்சி இலக்கியத்தை ஒரு நெட்டோட்டமாக ஒப்பிட்டுப் பார்க்கலாம். இது மேலைநாட்டினர் கூறும் 'Opera' என்னும் இசை நாடகத்தை ஒத்தது. கதைப் புலப்பாடு, எடுப்பு தொடுப்பு முடிப்பென முப்பிரிவாக அமையும். இப்பாட்டுக்கள் இன்னியத்தோடு இணைந்தொலிக்கும் குழுப்பாடல் முதலியன ஒருங்கமைந்ததே 'Opera' எனப்படும். 'Ballad Opera' 'Grand Opera' 'Comic Opera' என அதை மூவகைப் படுத்திப் பேசுவதும் உண்டு. இத் தமிழிசை நாடகத்திலோ இவ்வாறு பிரித்துப் பார்க்க இடமில்லை. கதைப் புலப்பாடும், செவ்வியற்பாங்கும், நகைச்சுவை நலனும் ஒன்றிக் கலந்துள்ளது. பதினெட்டாம் நூற்றாண்டில் ஆங்கில மொழியில் படைக்கப்பட்ட பல இசை நாடகங்கள் சமுதாயத்தின் அடித்தள மக்களைக் கதைமாந்தராகக் கொண்டு விளங்கின என்றும், அக்காலத்தில் பலராலும் அறியப்பட்டிருந்த பழம் பாடல்கள் அவற்றில் இடம் பெற்றிருந்த தாகவும் சொல்லப்படுகிறது. 'The Beggars Opera' (1728) என்னும் இசை நாடகத்தை ஆங்கிலத் திறனாய்வாளர் அதற்கு உதாரணம் காட்டுவார்.[3] குறவஞ்சியை இந்நிலையிலும் நாம் ஒப்பிட்டுப் பார்க்க வாய்ப்புண்டு.

மேலை நாட்டில் மட்டுமன்றி நம் இந்திய மொழிகள் பலவற்றிலும் இசை நாடகங்கள் மலர்ந்துள்ளன. 1853ஆம் ஆண்டு உருது மொழியில் *"இந்திர சபா"* என்னும் இசைநாடகம் புனையப்பட்டதாகவும் அதை முன் மாதிரியாகக் கொண்டு இந்திய மொழிக் கலைஞர்கள் பல நாடகங்களை உருவாக்கினர் என்றும் அறிஞர் இந்திரநாத் சௌத்ரி தம் அரிய ஆய்வுக் கட்டுரை ஒன்றில் கூறுகிறார்.[4] கன்னடத்திலும் காஷ்மீர மொழியிலும் *"கீத நாடகங்கள்"* (Musical Plays) இயற்றப்பட்டுள்ளன. இந்திய மொழிகளில் எழுதப்பட்டுள்ள இசை நாடகங்கள் பெரும்பாலும் தொன்மங்கள் (Myths) பழங்கதைகள் (Legends) நாட்டுப்புறவியல் (Folklore) முதலியவற்றைத் தம் தோற்றக்களமாகக் கொண்டுள்ளன. திருக்குற்றாலத் தலத்தை ஒட்டிய புராணச் செய்திகளும் அடியொட்டுப் பாறை போன்ற தொன்மங்களும் சிங்கன்–சிங்கியின் கிராமிய மணம் கமழும் உரையாடல்களும் குறவஞ்சியில் இடம் பெறுவதைச் சுட்டவும் வேண்டுமோ?

---

3. Mc. Graw - Hill, Encyclopedia of World Drama, Vol.3, p.37
4. I.N. Choudhuri, Comparative Indian Literature, Vol.I (Ed.), K.M. George, P.507.

திரிகூட ராசப்பர் வடமொழி நாடக மரபையும் அறிந்திருக்க வேண்டும். வடமொழி நாடகங்களில் சூத்திரதாரன் வருவது போல இவர் படைப்பில் கட்டியக்காரன் காட்டப்படுகிறான். எனினும் அவனுக்கு வடமொழி நாடகங்களில் இருப்பது போல் சிறப்பிடம் தரப்படவில்லை. அப்பாத்திரத்தை எடுத்த எடுப்பில் அறிமுகப்படுத்தி அதே வேகத்தில் அவனைக் கதையினின்றும் அப்புறப்படுத்தி விடுகிறார். வடமொழி மரபைத் தமிழ் மரபோடு கலக்க நினைக்கும் ஆசிரியரின் ஆரா விழைவே இதற்குக் காரணம். இதைத் தவிர வேறு எக்காரணத்தையும் நாம் அறியுமாறில்லை.

உலக நாடக மரபும் இந்திய நாடக மரபும் இப்படைப்பில் துண்டு துணுக்காக நம் பார்வையில் தட்டுப்படுகிறது. இதற்கும் மேலாக எனக்கு மற்றொரு கருத்தும் புலனாகிறது. திருக்குற்றாலக் குறவஞ்சி என்னும் பெயரில் இந்த இசை நாடகம் அமைந்திருந்தாலும் தமிழகம் என்னும் எல்லைக்கப்பாலும் விரிந்து இந்தியம் என்னும் முகட்டை இப்புலவரின் சிந்தனை தொட்டு நிற்கிறது.

திரிகூட ராசப்பரின் படைப்பான குறத்தி இந்திய தேசிய உணர்வை எதிரொலிக்கிறாள்.

> ***"கொல்லிமலை எனக்கிளைய செல்லிமலை அம்மே***
> ***கொழுநனுக்குக் காணிமலை பழநிமலை அம்மே***
> ***எல்லுலவு விந்தைமலை எந்தைமலை அம்மே***
> ***இமயமலை என்னுடைய தமையன்மலை அம்மே!"***

என்பது குறத்தியின் கூற்று. (*"இமயமலை என்னுடைய தமையன் மலை அம்மே!"* என்னும் வரியில் *"மன்னும் இமயமலை எங்கள் மலையே"* என்று பாடும் பின்னாளைய பாரதீய சிந்தனைக்கு வித்து தெரிகிறது அல்லவா?) அம்மட்டோ! 'கங்கையெனும் வடஅருவி தங்குமிந்திர சாபம்/கலந்தாடிற் கழுநீராய்த் தொலைந்தோடும் பாவம்' என்று இந்திய நம்பிக்கையை அவள் உயர்த்திப் பேசுகிறாள். குறவனோ இந்திய நாடு முழுவதையும் ஒரு சேரச் சுற்றி வரும் நாடோடியாகக் காட்டப்படுகிறான். குமரிமுனை முதல் குருச்சேத்திரம் வரை அவன் பாதங்கள் படாத ஊரே இல்லையாம். குறவன்–குறத்தி பாத்திரப் படைப்பை நீள நினைந்தால் தமிழ் தேசியத்தை இந்திய தேசியமாக விரித்துக் காணும் திரிகூட ராசப்பரின் அகல் மனம் நமக்குப் புலனாகும். வடக்கும் தெற்கும் ஊடாடி நிற்கும் கலவை நிலை இது!

V

எனவே இதுகாறும் கூறியவற்றை ஒருங்கு தொகுத்து ஒரு வாய்பாடாகச் சுருக்கிக் கூறினால் *"திருக்குற்றாலக் குறவஞ்சி கலவை நிலை என்னும் கட்டமைப்பு கொண்டது"* என்று ஒரே வாக்கியத்தில் தெளிவுபடுத்தி விடலாம். *"கலவை நிலை"* என்னும் தொடரைச் சற்றே மிகையாகக் கலந்து விட்டேனோ என்னவோ, இதன் கட்டமைப்பை விளக்க வேறு புதுத்தொடர் எனக்குக் கிட்டவில்லை.

வசந்தவல்லி குறத்தியை நோக்கி *"ஒன்று போடாமற் குறி சொல்லியே வந்தாய்/பின்னை உழப்பிப் போட்டாய்/குறியைக் குழப்பிப் போட்டாய்!"* என்று குறை கூறுவதுபோல நீங்கள் என்னைக் குறைசொல்ல மாட்டீர்கள் என்றே நம்புகிறேன்.

## சங்கச் செய்திகள்

11.03.2017 அன்று சங்க வளாகத்தில் முற்பகல் 10.30 மணியளவில் நடைபெற்ற சிறப்பு மாதாந்திரச் சொற்பொழிவில் தமிழறிஞர் இளங்குமரனார் "கற்றலும் கற்பித்தலும்" என்ற தலைப்பில் உரையாற்றினார். நிகழ்ச்சிக்குச் சங்கச் செயலாளர் வழக்குரைஞர் திரு. ச.மாரியப்பமுரளி அவர்கள் தலைமை வகித்தார். இந்நிகழ்ச்சியில் பேசிய இளங்குமரனார் அவர்கள் "ஆசிரியர்கள் எப்போதும் மாணவர்களாகவே இருக்க வேண்டும். தாம் படித்து முடித்துவிட்டோம் என்ற எண்ணமோ திருப்தியோ வந்துவிட்டால் அறிவு நிலை மட்டுப்பட்டு விடும். தனக்காகப் படித்தது மட்டுமின்றித் தனது மாணவர்களுக்காக என்றும் படிப்பவர்களே உயர்ந்த பேராசிரியர்களாக முடியும். கற்றலில் தெளிவு பெற்ற பிறகு அதனைக் கற்பிக்கும் போது ஆசிரியர்கள் இரட்டைத் தெளிவு பெறுவர். கற்றவரைப் பாராட்ட வேண்டும்; ஊக்குவிக்க வேண்டும். ஆற அமரச் சிந்தித்து உள்வாங்கி நாம் பயில வேண்டும். திறமை இருந்தால் கல்வியில் பெருமை அடையலாம். கல்வியால் கற்பவர்களும் கற்பிப்பவர்களும் பெருமைப்பட வேண்டும்" என்று கூறினார். கல்லூரி முதல்வர் மற்றும் துணைமுதல்வர் ஆகியோர் முறையே வரவேற்புரை மற்றும் நன்றியுரை நல்கினர். பேராசிரியர்கள், நூலகர், மாணவர்கள் மற்றும் தமிழார்வலர்கள் பலர் இந்நிகழ்வில் பங்கேற்றனர்.

21.03.2017 அன்று நான்காம் தமிழ்ச் சங்க நிறுவனர் வள்ளல் பொன். பாண்டித்துரைத் தேவர் அவர்களின் 151ஆம் பிறந்த நாள் விழா மற்றும் 'தனக்குவமை இல்லாத் தனிப்பெரு நூல் (தொல்காப்பியம்)' எனும் நூல் வெளியீட்டு விழா ஆகிய இருபெரும் விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. முன்னதாக சங்க, கல்லூரி நிர்வாகத்தினர், பேராசிரியர்கள், மாணவர்கள் திரளாகச் சென்று வள்ளல் பொன். பாண்டித்துரைத்தேவர் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்தனர். விழாவிற்குத் தலைவர் மாட்சிமை தங்கிய முகவை மன்னர். நா.குமரன் சேதுபதி அவர்கள் தலைமை ஏற்றுச் சிறப்புச் செய்தார்கள். சங்கத்தின் செயலாளர் வழக்குரைஞர் திரு.ச.மாரியப்பமுரளி அவர்கள் முன்னிலை உரை ஆற்றினார்கள். முதுமுனைவர் இரா.இளங்குமரனார் எழுதிய "தனக்குவமை இல்லாத் தனிப்பெரு நூல் (தொல்காப்பியம்)" நூலைத் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் மேனாள் பதிவாளர் பேராசிரியர் கு.வெ.பாலசுப்பிரமணியன் அவர்கள் வெளியிட, கல்லூரியின் செயலாளர் இராணி.ந.லட்சுமி குமரன் சேதுபதி அவர்கள் பெற்றுக் கொண்டார்கள். பேராசிரியர் கு.வெ.பாலசுப்பிரமணியன் தனது சிறப்புரையில், "தமிழில் ஒரு பொருளுக்குப் பல பெயர்கள் வழங்கி வருவது சிறப்பு. களிறு, பிடி, கந்துகம் என யானைக்குப் பல பெயர்கள் பழந்தமிழில் உண்டு. இன்று யானை என்ற ஒரு சொல்லே வழங்கி வருகிறது. யானை என்ற இனம் முன்பு அதிகமாக இருந்து இப்போது அருகிவிட்டது. கொண்மூ, எழினி, கார், கொண்டல் என்ற பல பெயர்கள் இருந்தாலும் நாம் மேகம் என்ற வேற்று மொழிச் சொல்லைத்தான் பயன்படுத்துகிறோம். 'நனைந்தனைய திருவடி என் தலைமேல் வைத்தார்' என்று திருநாவுக்கரசர் சிவபெருமானைப் பற்றிப் பாடினார். அதை பாஸ்கர சேதுபதி விவேகானந்தரை வரவேற்ற முறையோடு ஒப்புமை கூறலாம். உ.வே.சா.அவர்கள் நூல் பல வெளியிட பாண்டித்துரைத்தேவர் உதவியாக இருந்தார். கொடை கொடுப்பதில் சிறந்தவர் பாஸ்கர சேதுபதி. 1891–1893 வரை மூன்று ஆண்டுகளுக்குள் 40 இலட்சம் வரை கொடையாக வழங்கியவர்" என்றும் குறிப்பிட்டார். நூலாசிரியர் முதுமுனைவர். இரா.இளங்குமரனார் அவர்கள் தனது ஏற்புரையில் பாஸ்கர சேதுபதி, பாண்டித்துரைத்தேவர் ஆகியோரின் பண்புநலன்களைப் பாராட்டிப் பேசினார். ந.மு. வேங்கடசாமி நாட்டார் என்ற

ஏரோட்டியவரைத் தேரோட்டச் செய்தார். கடையில் வேலை பார்த்த கார்மேகக் கோனாரைப் பேராசிரியர் ஆக்கினார். செந்தமிழ் என்ற நூல் வருவதற்கு முன்னர்த் தமிழுக்காக வந்த வேறு நூல் எதுவுமில்லை. தமிழுக்காகத் தன் வீட்டையே கொடுத்தவர் இருவர். ஒருவர் பாண்டித்துரைத்தேவர், மற்றொருவர் வள்ளல் அழகப்ப செட்டியார். மதம், சாதி என்ற பிரிவினைகள் உடைக்கப்பட்ட இடம் தமிழ்ச்சங்கம். விபுலானந்தர் எழுதிய மதங்க சூளாமணி, கங்கை கொண்ட சோழன் போன்ற வேறு எங்கும் கிடைக்காத அரிய நூல்கள் தமிழ்ச் சங்க நூலகத்தில் கிடைத்தன" என்றும் குறிப்பிட்டார். முன்னதாகக் கல்லூரி முதல்வர் மற்றும் துணைமுதல்வர் ஆகியோர் முறையே வரவேற்புரை மற்றும் நன்றியுரை நல்கினர். பேராசிரியர்கள், நூலகர், மாணவர்கள் மற்றும் தமிழார்வலர்கள் பலர் இந்நிகழ்வில் பங்கேற்றனர்.

24.03.2017 அன்று முற்பகல் 11.00 மணியளவில் சங்க வளாகத்தில் எழுத்தாளர் திரு.அசோகமித்திரன் அவர்களுக்கு நினைவஞ்சலி செலுத்தப்பட்டது. கல்லூரித் துணைமுதல்வர் முனைவர்.கி.வேணுகா அவர்கள், "1954 முதல் அசோகமித்திரனின் இலக்கியப் படைப்புலகமானது சிறுகதை, குறுநாவல், நாவல், விமர்சனம், சுய அனுபவப் பதிவுகள் எனப் பன்முகப் பரிமாணம் கொண்டது; எழுத்தாளர் திரு.அசோகமித்திரனின் எழுத்துக்கள் யதார்த்தமானவை. சமூக அக்கறை கொண்டவை; ஒவ்வொரு கதையும் ஒவ்வொரு விதத்தில் படிப்பவரைக் கவரக் கூடியவை; தமிழ் நாவல் வரலாற்றில் சாதனை அத்தியாயமாக விளங்கக்கூடிய நாவல்கள் பலவற்றைப் படைத்தவர்; அவருடைய படைப்புகள் நூல்களாகவும் தனிக் கதைகளாகவும் அநேக இந்திய மொழிகளிலும் ஆங்கிலம் மற்றும் சில ஐரோப்பிய மொழிகளிலும் வெளியிடப்பட்டுச் சிறப்பான கவனத்தைப் பெற்றுள்ளன. ஒரு சிறந்த படைப்பாளியாக மட்டுமின்றி, 23 ஆண்டுகள் கணையாழி மாத இதழின் ஆசிரியராகவும் பணியாற்றியமை குறிப்பிடத்தக்கது" என்று கூறித் தமது உரையை நிறைவு செய்தார். இளம் இலக்கியம் முதலாமாண்டு மாணவர் க.பூபதிராஜ் தமது உரையில் "ஏறத்தாழ அறுபதாண்டு காலத் தமிழ் இலக்கிய உலகின் அடையாளம் அசோகமித்திரன் அவர்கள், அவருடைய பல்வேறு படைப்புகள் இந்திய மற்றும் அயல் மொழிகளில் மொழியாக்கம் பெற்றிருக்கின்றன. அமெரிக்க இலக்கியங்களைத் தமிழுக்கு அறிமுகம் செய்து வைத்தவர் அசோகமித்திரன். 1966 முதல் முழு நேர எழுத்தாளராக உருவெடுத்த அவர், தனது படைப்புகளை எளிமை மற்றும் மெல்லிய நகைச்சுவையால் மெருகேற்றியவர். தமிழ் இலக்கியத்திற்கு உலக அளவில் அங்கீகாரம் பெற்றுத்தந்தவர். இருநூறுக்கும் மேற்பட்ட சிறுகதைகள், கட்டுரை நூல்களை எழுதியுள்ள அசோகமித்திரனின் படைப்புலகம் மிகப்பெரியது. சாதாரண மக்களின் வாழ்க்கையை நுணுக்கமாக ஆராய்ந்து ஆழத்துடன் எழுதிய அசோகமித்திரன் ஓர் உன்னதப் படைப்பாளி" என்று குறிப்பிட்டார். கல்லூரி முதல்வர், துணைமுதல்வர், உதவிப் பேராசிரியர்கள், நூலகர் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்ட இந்நிகழ்வில் மறைந்த எழுத்தாளர் திரு.அசோகமித்திரன் அவர்களின் திருஉருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது.

25.03.2017 அன்று நான்காம் தமிழ்ச் சங்கத்தில், செயலாளர் வழக்குரைஞர் திரு.ச.மாரியப்பமுரளி அவர்கள் தலைமையில் இலக்கியத் திருவிழா மற்றும் கல்வியாளர்களுக்குப் பாராட்டு விழா நடைபெற்றது. மதுரை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் திரு.ஜோ.ஆஞ்சலோ இருதயசாமி, தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத்தின் மேனாள் பேரவை உறுப்பினர் திரு. பிரான்ஸிஸ் பாஸ்டின், கற்பகம் பதின்ம மேல்நிலைப்பள்ளியின் தாளாளர் திரு.மு.ராமு ஆகியோர் முன்னிலை வகித்தனர். நெல்லை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் எம்.கருணாகரன் அவர்கள்

## மே திங்கள் நினைவுக்குரிய தமிழ்ச்சான்றோர்கள்



க.த.திருநாவுக்கரசு
(மே 5 – 1989)



மயிலை சீனி வேங்கடசாமி
(மே 8 – 1980)



த.வே.உமாமகேசுவரன் பிள்ளை
(மே 9 – 1941)



பி.எஸ்.ராமையா
(மே 18 – 1983)



கா.அப்பாத்துரை
(மே 26 – 1989)



மா.இராச மாணிக்கனார்
(மே 26 – 1967)



ஜெக சிற்பியன்
(மே 26 – 1978)



ஆ.பூவராகம் பிள்ளை
(மே 28 – 1953)


பதிப்பாசிரியர் : **பேரா. இரா.சதாசிவம்**

**ஆசிரியர் குழு**

முதுமுனைவர் திரு. **இரா.இளங்குமரனார்**

முனைவர் திரு. **அ.அ.மணவாளன்**
முனைவர் திரு. **இராம.சுந்தரம்**
முனைவர் திரு. **ம.திருமலை**
முனைவர் திரு. **இ.மறைமலை**
முனைவர் திரு. **செ.கந்தசாமி**
முனைவர் திரு. **பெ.சுயம்பு**
முனைவர் திரு. **தி.முருகரத்தனம்**
முனைவர் திரு. **கு.வெ.பாலசுப்பிரமணியன்**
முனைவர் திரு. **மு.மணிவேல்**
முனைவர் திரு. **ம.பெ.சீனிவாசன்**
முனைவர் திரு. **இ.கி.ராமசாமி**
முனைவர் திரு. **உ.கருப்பத்தேவன்**

RNI Regd. No.5507/56 Postal Registration Number TN/MA/130/2017-19
Date of Publication 20th of Every Month
Posted at Madurai BPC on 25th of Every Month




# செந்தமிழ்க் கல்லூரி

**நான்காம் தமிழ்ச்சங்கம், மதுரை**

(தேசியத் தரக்கட்டுப்பாட்டுக் குழுவின் B+ தேசியத்தரம் பெற்றது)
மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றது.

54, தமிழ்ச்சங்கம் சாலை, மதுரை - 625 001. ☎0452 - 2343707 நிகரி : 0452 - 4373475

- இளம் இலக்கியம்
- இளங்கலை
- முதுகலை
- இளம்நிலை ஆய்வாளர்
- முதுநிலை ஆய்வாளர்
- பி.லிட்., பி.ஏ., எம்.ஏ., மாணவர்களுக்கான தமிழாசிரியர் பயிற்சி

**சிறப்பு அம்சங்கள்**

மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சி, யோகா மற்றும் தியானப் பயிற்சி, ஓலைச்சுவடி மற்றும் கல்வெட்டுப் பயிற்சி, பேச்சுக்கலைப் பயிற்சி, படைப்பாக்கத் திறன், விரிவுரையாளர் தகுதித் தேர்வு பயிற்சி போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**செம்மொழித் திட்டத்தின் கீழ் பணி வாய்ப்புகள் உள்ளன**

முனைவர் **சு.விஜயன்**
முதல்வர் (பொ.), செந்தமிழ்க் கல்லூரி

**இராணி ந.இலட்சுமி குமரன் சேதுபதி**
செயலாளர், செந்தமிழ்க் கல்லூரி


அனுப்புநர்,
**செயலாளர்,**
நான்காம் தமிழ்ச் சங்கம்,
54, தமிழ்ச் சங்கச் சாலை,
மதுரை - 625 001. தமிழ்நாடு.

From
**THE SECRETARY,**
The Fourth Tamil Sangam,
54, Tamil Sangam Road,
Madurai - 625 001.
Tamilnadu.

Book Post

பெறுநர் / To,

வெளியிடுபவர்: **ச.மாரியப்பமுரளி** M.A.,B.L., செயலாளர்
54, தமிழ்ச் சங்கச் சாலை, மதுரை - 625 001. **0452 - 2343707**
பதிப்பாசிரியர் : **இரா.சதாசிவம்** 2/861, இராசராசன் தெரு,
மதுரை - 625 020. அலைபேசி : **94874 45403**

அச்சிட்டோர்: **ஸ்ரீ பிரிண்டர்ஸ்** 147, கீழவெளி வீதி, மதுரை-1.
அலைபேசி : **97894 95738**